தினபூமி
thinaboomi.com

மதுரை, புதன், ஏப்ரல் 23, 2025 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



புதிய போப் ஆண்டவரை தேர்வு செய்யும் குழுவில் 4 இந்திய கார்டினல்கள்

...2-ம் பக்கம்

ஜெய்ப்பூர் ஆம்பர் கோட்டையை பார்வையிட்ட அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ்

...3-ம் பக்கம்

ஐ.பி.எல்.தொடரில் சர்ச்சை: மேட்ச் பிக்சிங்-ல் ஈடுபட்டதா ராஜஸ்தான் ராயல்ஸ் அணி..?

...6-ம் பக்கம்





தமிழக சட்டமன்ற பேரவையில் நேற்று, பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5-ம் தேதி வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும் என்று விதி 110-ன்கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். சட்டமன்ற நிகழ்வில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

### யு.பி.எஸ்.சி. தேர்வு: தமிழக அளவில்

# நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்றவர் முதலிடம்

## வருங்காலங்களில் லட்சக்கணக்கானோர் வாழ்வில் ஒளியேற்றிடும் என முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஏப். 23-

**யு.பி.எஸ்.சி. தேர்வில் அகில இந்திய அளவில் 23-ம் இடம் பிடித்த தமிழகத்தை சேர்ந்த சிவச்சந்திரன் நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்றவர் என்று பெருமிதம் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், நான் முதல்வன் திட்டம் வருங்காலங்களில் லட்சக்கணக்கானோர் வாழ்வில் ஒளியேற்றிடும் என பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

**50 பேர் தேர்ச்சி...**

2024-ம் ஆண்டுக்கான யு.பி.எஸ்.சி. சிவில் சர்வீஸ் தேர்வின் இறுதி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சக்தி துபே என்ற மாணவி முதலிடம் பெற்றுள்ளார். ஹர்ஷிதா கோயல் என்பவர் 2-ம் இடமும், டோங்க்ரே அர்ஷித் பராக் என்பவர் 3-ம் இடமும் பெற்றுள்ளனர். தமிழகத்தில் சிவச்சந்திரன் என்ற மாணவர் முதலிடமும், அகில இந்திய அளவில் 23-ம் இடமும் பெற்றுள்ளார். இவர் தமிழக அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர். மேலும் தமிழ்நாட்டில் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற 134 பேர் யு.பி.எஸ்.சி. நேர்முக தேர்வுக்கு சென்றதில் 50 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்ற 50 பேரில் 18 பேர் 'நான் முதல்வன்' திட்டத்தில் முழு நேர உறைவிட பயிற்சி மேற்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**மகிழ்ச்சியளிக்கிறது...**

இந்த நிலையில், யு.பி. எஸ்.சி. தேர்வு முடிவுகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:-

எது மகிழ்ச்சி?.... நான் மட்டும் முதல்வன் அல்ல; தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் முதல்வனாக என் பிறந்த நாளில் தொடங்கி வைத்த நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவர் யு.பி.எஸ்.சி. தேர்வில் தமிழ்நாட்டுத் தரவரிசையில் முதல்வனாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் இந்தத் திட்டம், வருங்காலங்களில் இலட்சக்கணக்கானோரின் வாழ்வில் ஒளியேற்றிடும் என்ற நம்பிக்கை என் மகிழ்ச்சியாகியுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளை முன்னிட்டு

# ஏப். 29-ம் தேதி முதல் மே 5-ம் தேதி வரை 'தமிழ் வார விழா'

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப். 23-

**பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளை முன்னிட்டு ஏப். 29 முதல் மே 5ம் தேதி வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும் என்றும், மாவட்டந்தோறும் கவியரங்கங்கள் - கருத்தரங்கங்கள் நடைபெறும் என்றும் சட்டப்பேரவையில், விதி 110-ன்கீழ் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.**

தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- பல்வேறு சிறப்பிற்குரிய தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களில் ஒருவரான பாவேந்தரின் பிறந்தநாளை முன்னிட்டு வரும் ஏப்ரல் 29 முதல் மே 5 வரை ஒரு வார காலத்திற்கு தமிழ் வார விழா கொண்டாடப்படும். இந்த ஒரு வார காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தமிழ்மொழியையும், பாவேந்தர் பாரதிதாசனின் பங்களிப்பையும் கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது

இந்த வையம்'' என்ற பாவேந்தரின் கவிதை வரிகளை மையப்படுத்தி அனைத்து மாவட்டங்களிலும் கவியரங்கங்கள் மற்றும் கருத்தரங்கங்கள் நடைபெறும். சிறந்த தமிழறிஞர்கள் மற்றும் இளங்கவிஞர்கள் இதில் பங்கேற்பார்கள். தமிழ்மொழியில் சிறந்து விளங்கும் இளம் எழுத்தாளர், கவிஞர் ஒருவருக்கு பாரதிதாசன் இளம் படைப்பாளர் என்ற விருது வழங்கப்படும். புகழ் பெற்ற தமிழிலக்கிய படைப்பாளிகளின் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வரங்கங்கள் நடத்தப்படும்.

மாணவர்களிடையே தமிழ்மொழியின் பெருமையை எடுத்துரைக்க பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். தமிழ் இசை, நடனம், மற்றும் மரபுக்கலைகளை மையப்படுத்திய கலை நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடைபெறும்.

இது போன்ற தமிழ் நிகழ்ச்சிகள் மூலமாக பாவேந்தர் பிறந்த நாள் தமிழ் மணக்கும் வாரமாகக் கொண்டாடப்படும்.

தமிழ் வார விழா நமது மொழியின் பெருமையை உலகிற்கு எடுத்துரைப்பதற்கு ஒரு நல்வாய்ப்பாகும்.

தமிழ்மொழியை அடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்வோம். வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும் என்றார் பாவேந்தர். அத்தகைய எழுச்சியை இந்த விழாக்கள் மூலம் உருவாக்க வேண்டும். செந்தமிழைப் பரப்ப இந்த விழாக்கள் பயன்படும். தமிழர் தம் அறிவுச் செல்வத்தைக் காட்ட இந்த விழாக்கள் பயன்படும். தமிழ் உணர்ச்சியை மங்காமல், குன்றாமல் இந்த அரசு காத்திடும்.

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பை வெளியிட்டு பேசினார்.

### வரும் சனிக்கிழமை நடைபெறும்

# போப் பிரான்சிஸ் இறுதி சடங்கில் தமிழக அரசு சார்பில் 2 பேர் பங்கேற்பு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

வாடிகன், ஏப். 23-

**போப் பிரான்சிஸின் உடல் இன்று (புதன்கிழமை) காலை 9:00 மணிக்கு வாடிகனில் உள்ள புனித பீட்டர்ஸ் பேராலயத்துக்கு கொண்டு செல்லப்படும் என்றும் சனிக்கிழமை காலை 10:00 மணிக்கு இறுதிச் சடங்குகள் நடைபெறும் என்றும் வாடிகன் அறிவித்துள்ளது. தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் சா.மு. நாசர் மற்றும் இனிகோ எஸ். இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

கத்தோலிக்க கிறிஸ்தவ மத தலைவரான போப் பிரான்சிஸ் நேற்று முன்தினம் மறைந்தார். அவருக்கு வயது 88. கடந்த சில மாதங்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டு அதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த அவர், நேற்று முன்தினம் உயிரிழந்தார். நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை வாடிகனில் உள்ள காசா சாண்டா மார்ட்டாவின் தேவாலயத்தில் மரணத்தை உறுதிப்படுத்தும் நிகழ்வு நடைபெற்றது. இதையடுத்து, அவரது உடல் சவப் பெட்டியில் வைக்கப்பட்டது. இந்த சடங்குகளுக்கு கார்டினல் கேமர்லெங்கோ கெவின் ஃபாரெல் தலைமை தாங்கினார்.

இந்நிலையில், போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கு குறித்த அறிவிப்பை வாடிகன் வெளியிட்டுள்ளது. வாடிகனின் செய்தி அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "போப் பிரான்சிஸின் உடல் இன்று (புதன்கிழமை) காசா சாண்டா மார்ட்டாவின் தேவாலயத்திலிருந்து புனித பீட்டர்ஸ் பேராலயத்துக்கு காலை 9 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இதற்கான சடங்கிற்கு புனித ரோமானிய திருச்சபையின் கமர்லெங்கோ கார்டினல் கெவின் ஃபாரெல் தலைமை தாங்குவார். புதன்கிழமை காலை 9:00 மணி முதல் இறுதிச் சடங்கு நடைபெறும் சனிக்கிழமை காலை 10:00 மணி வரை போப் பிரான்சிஸின் உடல் புனித பீட்டர்ஸ் பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.



சனிக்கிழமை அன்று பக்தர்கள், கார்டினல்கள், பேராயர்கள், ஆயர்கள் மற்றும் பாதிரியார்கள் முன்னிலையில் இறுதிச் சடங்குப் பிரார்த்தனை நடைபெறும். இதற்கு கார்டினல்ஸ் கல்லூரியின் டீன் கார்டினல் ஜியோவானி பாட்டிஸ்டா ரே தலைமை தாங்குவார். போப் பிரான்சிஸின் ஆன்மா இளைப்பாறுவதற்காக ஒன்பது நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும். 9 நாட்களும் திருப்பலிகள் நடைபெறும். சனிக்கிழமை போப் பிரான்சிஸின் உடல் புனித பீட்டர்ஸ் பேராலயத்தில் இருந்து இறுதிச் சடங்குகளுக்காக புனித மேரி மேஜர் பேராலயத்துக்கு கொண்டு செல்லப்படும்.

இறுதி ஊர்வலம் சாண்டா மார்த்தா சதுக்கம் மற்றும்

(கடைசி பக்கம் பார்க்க)

# பழைய ஓய்வூதிய திட்டம் குறித்து உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும்

## சட்டசபையில் அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்

சென்னை, ஏப். 23-

**அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதிய திட்டம் விவகாரத்தில் உரிய நேரத்தில், உரிய முடிவை அரசு எடுக்கும் என்று சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.**

தமிழக சட்டப்பேரவையில் நேற்று (ஏப்.22) கேள்வி நேரத்தின்போது மதுராந்தகம் தொகுதி எம்.எல்.ஏ. மரகதம் குமரவேல், "மதுராந்தகம் சார்நிலைக் கருவூலத்துக்கு புதிய கட்டிடம் கட்டப்படுமா?'' என கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, "புதிய கட்டிடம் கட்ட வருவாய்த்துறை சார்பில் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுப் பணித்துறையிடம் விரிவான திட்ட அறிக்கை பெற்றபின் மதுராந்தகம் சார்நிலைக் கருவூலம் அலுவலக கட்டிடம் கட்டப்படும்.'' என்றார்.

தொடர்ந்து, மகரதம் குமரவேல், "லட்சக்கணக்கான தமிழக அரசு ஊழியர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்து அமைச்சர்களாக அமர வைத்துள்ளனர். அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளின்படி, அவர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டம் நிறைவேற்றப்படுமா?'' என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு அமைச்சர் தங்கம் தென்னரசு, பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக, அரசு செயலர் ககன்தீப் சிங் பேடி தலைமையில் அரசு சார்பில் ஒரு குழு அமைத்துள்ளது. அந்த குழுவுக்கு கால வரையறை தரப்பட்டுள்ளது. பல்வேறு அரசு ஊழியர் சங்கங்கள், ஆசிரியர்களுடன் தங்கள் கருத்துகளை தந்துள்ளன. அதை பரிசீலித்து உரிய நேரத்தில் சரியான முடிவுகளை அரசு எடுக்கும்.'' என்று அவர் கூறினார்.

### ஒரேநாளில் ரூ.2,200 அதிகரிப்பு:

# ரூ.75 ஆயிரத்தை நெருங்குகிறது தங்கம்

சென்னை, ஏப். 23-

**தங்கம் விலை வரலாறு காணாத புதிய உச்சமாக நேற்று (ஏப்.22) பவுனுக்கு ரூ.2,200 அதிகரித்து ஒரு பவுன் ரூ.74,320-க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.275 உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.9,290-க்கும் விற்பனையானது.**

தங்கம் விலை தொடர்ந்து ஏற்றம் கண்டு வருகிறது. உலக அளவில் தங்கத்துக்கு டிமாண்ட் அதிகம் உள்ளது. அதன் காரணமாக சர்வதேச பொருளாதார சூழலுக்கு ஏற்ப அதன் விலை ஏற்ற இறக்குத்துடன் இருப்பது வழக்கம். இருப்பினும் இந்தியாவில் அண்மையில் வரலாறு காணாத வகையில் புதிய விலை உச்சத்தை எட்டி வருகிறது. அந்த வகையில் நேற்று (ஏப்.22) சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் பவுனுக்கு ரூ.2,200 அதிகரித்து விற்பனையானது. ஒரு கிராம் ரூ.275 என ஏற்றம் கண்டு விற்பனையானது. ஒரு பவுன் தங்கம் ரூ.74,320 மற்றும் ஒரு கிராம் தங்கம் ரூ.9,290-க்கு விற்பனையானது.

தங்கம் விலை உயர்வு குறித்து சென்னை தங்கம், வைர வியாபாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் சாந்தகுமார் கூறும்போது, "அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொடங்கிய வர்த்தக போர் தற்போது சீனாவுக்கு எதிராக தீவிரமடைந்துள்ளது. இதனால், முதலீட்டாளர்கள் தங்களது முதலீட்டை பாதுகாக்கும் நோக்கில் தங்கத்தில் அதிக அளவு முதலீடு செய்கின்றனர். மேலும், பங்குச் சந்தை, அரசு பத்திரங்கள், கிரிப்டோ கரன்சி உள்ளிட்ட மற்ற முதலீடுகளில் நிலையற்ற தன்மை காணப்படுவதாலும், தங்கத்தில் முதலீடு செய்வது அதிகரித்துள்ளது.

இத்தகைய காரணங்களால், தங்கம் விலை புதிய உச்சத்தில் விற்பனையாகி வருகிறது. வரும் நாட்களில் தங்கம் விலை சற்று குறைந்தாலும், மீண்டும் அதிகரிக்கவே அதிக வாய்ப்பு உள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு பவுன் தங்கம் விலை ரூ.90 ஆயிரம் வரை அதிகரிக்கும். அடுத்த ஆண்டு ஒரு பவுன் ரூ.1 லட்சத்தை தாண்டி விற்பனையாகவும் வாய்ப்பு உள்ளது என்றார். வரும் 30-ம் தேதி அட்சய திருதியை என்பதால், பலரும் தங்கம் வாங்க திட்டமிட்டிருந்தனர். இந்நிலையில், தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், நகை வாங்குவோர் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# டாஸ்மாக் பணியாளர்களுக்கு ரூ.2 ஆயிரம் சம்பளம் உயர்வு

## அமைச்சர் செந்தில் பாலாஜி அறிவிப்பு


சென்னை, ஏப். 23-

**டாஸ்மாக் பணியாளர்களுக்கு ரூ.2 ஆயிரம் சம்பளம் உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 1-ம் தேதி முதல் மாதந்தோறும் உயர்த்தி வழங்கப்படுமென அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.**

தமிழக சட்டசபையில் நேற்று மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று பேசிய உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த துறையின் அமைச்சர் செந்தில் பாலாஜி, நிறைவாக புதிய அறிவிப்புகளையும் வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 6,567 மேற்பார்வையாளர்கள், 14,636 விற்பனையாளர்கள் மற்றும் 2,426 உதவி விற்பனையாளர்கள் என மொத்தம் 23,629 மதுபான சில்லறை விற்பனைக் கடைப் பணியாளர்கள் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். தற்போது வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியம் மேற்பார்வையாளர்களுக்கு ரூ.2 ஆயிரம், விற்பனையாளர்களுக்கு ரூ.2 ஆயிரம் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு ரூ.2 ஆயிரம் என 1-4-2025 முதல் மாதந்தோறும் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.64.08 கோடி கூடுதல் செலவாகும். இவ்வாறு அவர் கூறினார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**




BSE ↑ 187.09 பாயின்ட் 79,595.59

NSE ↑ 41.70 பாயின்ட் 24,167.25



**தங்கம்**
1 சவரன் ₹74,320
1 கிராம் ₹9,290



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00

**$ டாலர்** ₹85.19

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# புதிய போப் ஆண்டவரை தேர்வு செய்யும் குழுவில் 4 இந்திய கார்டினல்களுக்கு இடம்

**வாடிகன், ஏப். 23-**

புதிய போப் ஆண்டவரை தேர்வு செய்யும் குழுவில் 4 இந்திய கார்டினல்கள் இடம் பெற்றனர்.



கத்தோலிக்க கிறிஸ்துவ மதத்தலைவரான போப் பிரான்சிஸ் நேற்று காலமானார். அவரது மறைவுக்கு உலகம் முழுவதும் உள்ள அரசியல் கட்சி தலைவர்கள், மத தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகிறார்கள். போப் பிரான்சிஸ் மறைவை தொடர்ந்து புதிய போப் தேர்வுக்கான நடைமுறைகள் தொடங்க உள்ளன. புதிய போப் தேர்வில் 80 வயதுக்கு குறைவான கார்டினல்கள் வாடிகனில் கூடி தேர்வு நடைமுறைகளை செய்ய உள்ளனர். இந்த தேர்வுக்குழுவில் இந்திய கார்டினல்கள் 4 பேரும் இடம் பெற்றுள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு:-

72 வயதான இவர் கோவா,டாமன் பேராயர். இந்திய கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு, ஆசிய ஆயர்கள் மாநாடுகளின் கூட்டமைப்பு தலைவராக உள்ளார். புலம் பெயர்ந்தோர் வந்தோரை ஆதரிப்பதற்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் நீண்ட கால பங்களிப்பை அளித்து வருகிறார். பசேலியாஸ் கிளிமிஸ்: இவரது இயற்பெயர் ஐசக் தொட்டுங்கல்; 64 வயதான இவர் கேரள மாநில திருவனந்தபுரத்தை ஸ்தலமாக கொண்ட சைரோ மலங்கரா கத்தோலிக்க திருச்சபை பேராயர். இந்த திருச்சபையின் ஆயராக பல ஆண்டுகளாக நீடித்து வருகிறார். 2001 ஆம் ஆண்டு பிஷப்பான அவர், 2012-ல் கார்டினலானார். ஆண்டனி போலா: ஐதராபாத்தை சேர்ந்த பேராயரான இவரின் வயது 63. இந்தியாவின் முதல் தலித் கார்டினல் என்ற வரலாற்றை படைத்தவர். அவரது நியமனம் திருச்சபையில் ஒரு சமத்துவத்தை உணர்த்துவதாக கருதப்படுகிறது. ஜார்ஜ் ஜேக்கப் கூவக்காடு: இந்தியாவின் 4 கார்டினல்களில் இவர்தான் மிகவும் இளையவர்.

இவரின் வயது 51 ஆகும். உலகம் முழுவதும் பல்வேறு மதங்கள் இடையே புரிதலை ஏற்படுத்த வேண்டும் என்பதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்.

# புதுச்சேரியில் பேருந்து நிலையத்தை திறக்க கோரி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்

**புதுச்சேரி, ஏப்.23-**

புதுச்சேரியில் கட்டி முடிக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை திறக்க வலியுறுத்தி அ.தி.மு.க. மீண்டும் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

அ.தி.மு.க. மாநிலச் செயலாளர் அன்பழகன் தலைமையில் கடலூர் சாலை தற்காலிக பேருந்து நிலையம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏற்கெனவே புதிய பேருந்து நிலையத்தை திறக்க வலியுறுத்தி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம் நடத்தியது. இன்னும் திறக்கப்படாததால் நேற்று தற்காலிக பேருந்து நிலையம் முன்பு போராட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில செயலாளர் அன்பழகன் பேசியதாவது: தற்போது சுமார் 33 கோடி ரூபாய் செலவில் பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டது. பேருந்து நிலையம் விரிவாக்கம் முடிவடைந்து கடந்த 4 மாதங்களுக்கு முன் நகராட்சியிடம் பேருந்து நிலையம் ஒப்படைக்கப்பட்டு பிறகும் இன்று வரை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. தற்போது ஏ.எப்.டி மைதானத்தில் தற்காலிகமாக இயங்கும் பேருந்து நிலையத்தால் மக்கள் துயரத்திற்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். அங்கு தினசரி வரும் பயணிகள் வசதிக்காக கழிப்பறைகள் கூட இல்லை. தற்காலிக பேருந்து நிலையத்தில் ஏற்படும் புழுதிகாற்றினால் சுவாசக்கோளாறு உள்ளிட்ட நோய்களினால் பாதிக்கப்படுகின்றனர்.

இது சம்பந்தமாக பலமுறை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றும் நகராட்சி நிர்வாகத்தினர் பொறுப்பற்ற முறையில் உள்ளனர். உண்மை நிலையை முதல்வர் உணர்ந்து உடனடியாக சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளை அழைத்து பேசி கட்டிமுடிக்கப்பட்ட பேருந்து நிலையத்தை உடனடியாக திறந்து மக்கள் பயன்பாட்டிற்கு இந்த மாதத்திற்குள் கொண்டுவர வேண்டும் என்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் முன்னாள் தலைவர் டாக்டர் சாந்தா அவர்களின் நினைவு அருங்காட்சியகத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

# அரசு முறை பயணமாக சவுதி அரேபியா சென்றடைந்தார் பிரதமர் நரேந்திரமோடி

**புதுடெல்லி, ஏப். 23-**

"சவுதி அரேபியாவுடனான வரலாற்று ரீதியிலான நீண்ட கால உறவுகளை இந்தியா மதிக்கிறது. சமீப காலங்களில் இருநாடுகளுக்கு இடையேயான உறவுகள் மூலோபாய ஆழத்தையும் உத்வேகத்தையும் பெற்றுள்ளன" என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபிய பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மானின் அழைப்பின் பெயரில் இரண்டு நாள் பயணமாக பிரதமர் மோடி சவுதி அரேபியாவுக்கு நேற்று கிளம்பிச் சென்றார். பயணத்துக்கு முன்பாக பிரதமர் மோடி கூறியதாவது:

"பட்டத்து இளவரசர் மற்றும் பிரதமர் முகம்மது பின் சல்மானின் அழைப்பின் பெயரில் சவுதி அரேபியாவுக்குச் செல்கிறேன். சமீப ஆண்டுகளில் மூலோபாய ஆழத்தையும், உத்வேகத்தையும் பெற்றுள்ள சவுதி அரேபியாவுடனான நீண்டகால வரலாற்று உறவுகளை இந்தியா மதிக்கிறது.

நாங்கள் ஒன்றாக இணைந்து பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி மற்றும் மக்களுக்கிடையேயான உறவுகளில் பரஸ்பர நன்மை பயக்கும் மற்றும் ஆக்கப்பூர்வமான கூட்டாண்மையை உருவாக்கியுள்ளோம். பிராந்திய அமைதி, வளமை, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவைகளில் ஆர்வத்தையும், அர்ப்பணிப்பையும் பகிர்ந்துள்ளோம்.

கடந்த பத்தாண்டுகளில் இது எனது மூன்றாவது சவுதி அரேபிய பயணம், வரலாற்றுச் சிறப்புமிக்க நகரான ஜெத்தாவுக்கு முதல் பயணமாகும். எனது சகோதரர் இளவரசர் முகம்மது பின் சல்மானின் 2023 வெற்றிகரமான இந்திய பயணத்தின் அடிப்படையில் 2வது மூலோபாய கூட்டாண்மைக் குழு கூட்டத்தில் பங்கேற்கவும், கலாச்சாரம் மற்றும் மக்களுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்துவதில் மகத்தான பங்களிப்பினைச் செய்வதற்கும் ஆவலுடன் காத்திருக்கிறேன்.

மேலும், இரண்டு நாடுகளுக்கு இடையே வாழும் இணைப்பு பாலமாகவும், கலாச்சாரம் மற்றும், மனித உறவுகளை வலுப்படுத்துவதில் மகத்தான பங்களிப்பைச் செய்து வரும் சவுதி அரேபியாவில் வசிக்கும் துடிப்பான இந்தியச் சமூகத்தினரை சந்திக்கவும் ஆவலாக இருக்கிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## 3 ஆண்டுகளாக நீடிக்கும் உக்ரைன் போர்:

# அமைதி பேச்சுவார்த்தைக்கு தயார்: ரஷ்ய அதிபர் புதின் திடீர் அறிவிப்பு

**மாஸ்கோ, ஏப். 23-**

உக்ரைன் போர் தொடர்பாக அமைதி பேச்சுவார்த்தைக்கு தயார் என்று ரஷ்ய அதிபர் புதின் அறிவித்துள்ளார்.

உக்ரைன் ரஷ்யா இடையேயான போர் 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனிடையே, கிறிஸ்தவ மதத்தினரின் முக்கிய நிகழ்வான ஈஸ்டர் பண்டிகையை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மட்டும் தற்காலிக போர் நிறுத்தம் அமலபடுத்தப்படுவதாக ரஷ்ய அதிபர் புதின் அறிவித்தார். ஆனாலும், ஈஸ்டர் தினத்திலும் ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டினார். இதனை தொடர்ந்து தற்காலிக போர் நிறுத்தம் நிறைவடைந்த நிலையில் இரு நாடுகளுக்கும் இடையேயான போர் நேற்று மீண்டும் தொடங்கியது.

இந்நிலையில், போர் நிறுத்தம் தொடர்பாக அமைதி பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக ரஷ்ய அதிபர் புதின் அறிவித்துள்ளார். உக்ரைனுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி போரை முடிவுக்கு கொண்டுவர தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். 3 ஆண்டுகளாக நீடித்து வரும் போரில் முதல்முறையாக உக்ரைனுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யா முன்வந்துள்ளது. அதேவேளை, புதினின் இந்த அறிவிப்பு தொடர்பாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழக கவர்னரை பதவி நீக்க வேண்டும்:

# வி.சி.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம்

**சென்னை, ஏப். 23-**

கவர்னர் ஆர்.என்.ரவியை பதவி நீக்க வேண்டும் - விசிக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் கட்சியின் தலைவர் திருமாவளவன் தலைமையில் சென்னை அசோக்நகரில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து திருமாவளவன் பேசியதாவது:-

கவர்னரின் அதிகாரத்தை வரையறுத்து சுப்ரீம் கோர்ட்டு வழங்கியுள்ள வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வரவேற்கிறோம். சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை மதித்து கவர்னர் ஆர்.என்.ரவியை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதியை வலியுறுத்துகிறோம்.

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை மதிக்காமல் துணை வேந்தர்கள் கூட்டத்தை கூட்டியுள்ள கவர்னர் மீதும், சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதியை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்த பா.ஜ.க. எம்.பி. ரிஷிகாந்த் துபே மீதும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை தாமே முன்வந்து சுப்ரீம் கோர்ட்டு மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# நீலகிரியில் காட்டு யானை தாக்கிய பெண் பலி

**நீலகிரி, ஏப். 23-**

நீலகிரி மாவட்டம் மசினகுடி பகுதியை சேர்ந்தவர் சரசு(58). இவர் நேற்றுமுன்தினம் மாலை அங்குள்ள பொக்கபுரம் சாலையில் தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அப்போது, திடீரென வந்த காட்டு யானை, சரசை தாக்கி தூக்கி வீசியது. இதில் அவர் படுகாயம் அடைந்தார். உடனடியாக அவரை உள்ளூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அங்குள்ளவர்கள் அனுமதித்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக ஊட்டி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.



அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டநிலையில், சிகிச்சை பலனின்றி இரவு 11 மணியளவில் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பாக வனத்துறை மற்றும் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். மேலும், காட்டு யானையை வனப்பகுதிக்குள் விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## கோடை விடுமுறை எதிரொலி:

# திருச்சி-தாம்பரம் இடையே சிறப்பு ரயில்கள் இயக்கம்

**திருச்சி, ஏப். 23-**

கோடை விடுமுறையை முன்னிட்டு திருச்சி - தாம்பரத்துக்கு இடையே வரத்தில் 5 ரயில்கள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோடை காலத்தையொட்டி கூட்ட நெரிசலை தவிர்க்க சென்னை தாம்பரம் - திருச்சி இடையே வாரத்தில் 5 நாட்கள் சிறப்பு எக்ஸ்பிரஸ் ரயில்கள் இயக்கப்பட இருக்கிறது. இது தொடர்பாக, தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

திருச்சியில் இருந்து தாம்பரத்திற்கு வரும் 29-ந் தேதி முதல் ஜூன் மாதம் 29-ந் தேதி வரை காலை 5.35 மணிக்கு சிறப்பு ரயில் (வண்டி எண் 06190) இயக்கப்படுகிறது. வாரத்தில், செவ்வாய், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 5 நாட்கள் இயக்கப்படும் இந்த ரயில் மதியம் 12.30 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும். மறு மார்க்கத்தில் தாம்பரத்தில் இருந்து திருச்சிக்கு வருகிற 29-ந் தேதி முதல் ஜூன் 29-ந் தேதி வரை செவ்வாய், புதன், வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய 5 நாட்கள் சிறப்பு ரயில் (06191) இயக்கப்படுகிறது.

மாலை 3.45 மணிக்கு தாம்பரத்தில் புறப்படும் இந்த சிறப்பு ரயில் இரவு 10.40 மணிக்கு திருச்சியை சென்றடைகிறது. இந்த ரயில், தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம், மயிலாடுதுறை, சீர்காழி, சிதம்பரம், திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்), பண்ருட்டி, விழுப்புரம், திண்டிவனம், மேல்மருவத்தூர், செங்கல்பட்டு ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும். இந்த சிறப்பு ரயிலுக்கான முன்பதிவு நேற்று மதியம் 2.15 மணிக்கு தொடங்குகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**23-04-2025**




**மேஷம்:-** பெண்களால் தன லாபம் அடைவீர்கள். பிறருக்கு விருந்து உபசாரம் செய்து மகிழ்வார்கள். பிரிந்தவர் கூடிப் பேரின்பம் அடைவது உறுதி. வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும்.

**ரிஷபம்:-** தொழில் வருமானம் திருப்தி அளிக்கும். சாத்திரங்களில் ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். தொழில் வளம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**மிதுனம்:-** மனதிற்கினிய நல்ல மனைவி அமைவாள். புனிதப் பயணங்களால் புண்ணியம் சேரும். தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். அன்னதானம் போன்ற நற் காரியங்களில் ஈடுபடுவீர்கள்

**கடகம்:-** எல்லோருக்கும் நல்லதே நினையுங்கள். வழக்குகளில் வாய்தா வாங்கிக் கொள்வது நல்லது. மனைவியின் மனம் அறிந்து செயல்பட்டால் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம்.

**சிம்மம்:-** பல முகாந்திரங்கள் மூலம் பண வரவு கூடும். எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகள் எளிதாக ஈடேறும்.

**கன்னி:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். உல்லாசப் பயணங்களால் உள்ளம் மகிழும். புதுப்பெண்கள் சிநேகமும், தனக்கென ஒரு தனி வீடு அமையும். குடும்பத்தில் சுப காரியங்கள் நிறைவேறும்.

**துலாம்:-** சிரத்தையற்ற செயலால் திறமை இருந்தும் நல்ல பெயர் கிடைக்காது. தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும். வியாபாரிகளுக்கு ஓரளவு இலாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** வீட்டில் உள்ள பொருட்களை பாதுகாக்க எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. வாகனங்களில் செல்லும் முன் அதன் பாகங்களை பரிசோதிப்பது எடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:-** பல முகாந்திரங்கள் மூலம் பண வரவு கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும். சகோதரரால் நன்மைகள் ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் எளிதாக ஈடேறும்.

**மகரம்:-** பணவரவு அதிகரித்து மகிழ்ச்சியால் மனம் மகிழும். புதிய வாகனங்களை வாங்க முயலாதீர்கள், மனதிற்கினிய நல்ல மனைவி அமைவாள். புனிதப் பயணங்களால் புண்ணியம் சேரும்.


**கும்பம்:-** தொழில் வருமானம் அதிகரிக்கும். நேரத்தை வீணாக்காமல் தன்னம்பிக்கையுடன் படித்தால் தேரலாம். தீர்த்த யாத்திரைகள் மகிழ்வு தரும். புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும்.

**மீனம்:-** தொழிலில் இழப்பு ஏற்படும் என்று தெரிந்தும் அதிக முதலீடுகள் செய்யாதிருப்பது நல்லது. தீய வழிகளில் தேவையற்ற செலவுகளை செய்ய வேண்டியது வரும். சிலருக்கு இடமாற்றம், பணமுடையும் ஏற்படலாம்.

# இங்கிலாந்தில் ரூ.56 லட்சத்துக்கு ஏலம் போன உடைந்த பூந்தொட்டி!

**லண்டன், ஏப். 23-**

இங்கிலாந்தில் உடைந்த பூந்தொட்டி ஒன்று ரூ.56 லட்சத்துக்கு ஏலம் போயுள்ளது.



இங்கிலாந்து நாட்டிலுள்ள ஒரு தோட்டத்தில் உடைந்த நிலையில் 4 அடி உயரமுள்ள பூந்தொட்டி ஒன்று இருந்துள்ளது. அந்தப் பூந்தொட்டியானது ஜெர்மனியைச் சேர்ந்த புகழ்பெற்ற செராமிக் கலைஞரான ஹான்ஸ் கோபர் என்பவரால் உருவாக்கப்பட்டது எனக் கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து, லண்டனைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் மூலம் அப்பூந்தொட்டி ஏலத்துக்கு விடப்பட்டது. துவக்கத்தில், ரூ.6 லட்சம் முதல் ரூ.11 லட்சம் என விலை நிர்ணயிக்கப்பட்டது. இந்தப் பூந்தொட்டியை விலைக்கு வாங்க அமெரிக்கா, டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நபர்களுக்கு இடையே கடுமையான போட்டி நிலவியது.

இந்தப் போட்டியினால் அதன் விலை கிடுகிடுவென உயர்ந்து இறுதியாக 66 அமெரிக்க டாலருக்கு (இந்திய ரூபாய் மதிப்பில் 56 லட்சம்) விற்பனையாகியுள்ளது. மேலும், அந்தப் பூந்தொட்டியானது சேதாரமாகியுள்ளதால் அதனை சீரமைக்க ரூ.9 லட்சம் வரையில் செலவாகும் என நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர். தற்போது விற்பனையாகியுள்ள அந்தப் பூந்தொட்டி கடந்த 1964-ம் ஆண்டு அடையாளம் தெரிவிக்கப்படாத பெண் ஒருவர் கேட்டுக்கொண்டதால், ஹான்ஸ் கோபர் செய்து கொடுத்துள்ளார். பல ஆண்டுகளாக அந்தப் பெண்ணின் தோட்டத்திலிருந்த அந்தப் பூந்தொட்டியை அவரின் மறைவுக்கு பின்னர் குடும்பத்தினர் பாதுகாத்து வந்துள்ளனர்.

பின்னர், அதன் வரலாற்று சிறப்பை அறிந்த அவர்கள் சிஸ்விக் ஆக்‌ஷன்ஸ் எனும் நிறுவனத்தின் மூலம் தற்போது ஏலத்தில் விற்பனை செய்துள்ளனர்.

மேலும், கோபர் உருவாக்கிய கலைப்பொருள்கள் பெரும்பாலும் 10 முதல் 40 செ.மீ. அளவில் மட்டுமே இருக்கும் எனக் கூறப்படும் நிலையில் சுமார் 4 அடி உயரமுள்ள இந்தப் பூந்தொட்டி அவர் உருவாக்கிய சில உயரமான பொருள்களில் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சித்ரா பவுர்ணமி கிரிவலம்:

# திருவண்ணாமலையில் வி.ஐ.பி. தரிசனம் ரத்து

**திருவண்ணாமலை,ஏப். 23-**

சித்ரா பவுர்ணமி கிரிவலத்தில் திருவண்ணாமலையில் கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வி.ஐ.பி. தரிசனம் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையில் மாதந்தோறும் பவுர்ணமி கிரிவலம் பிரசித்தி பெற்றது என்றாலும், சித்திரை மாதம் வரும் சித்ரா பவுர்ணமி கிரிவலம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அந்த வகையில், அடுத்த மாதம் (மே) 11-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8.01 மணி முதல் மறுநாள் இரவு 10.25 மணி வரை சித்ரா பவுர்ணமி கிரிவலம் வருகிறது. வழக்கத்தைவிட சித்ரா பவுர்ணமிக்கு கிரிவலம் வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்பதால், பல்வேறு முன்னேற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறது.

அந்த வகையில், 20 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட இருக்கிறது. மேலும், அண்ணாமலையார் கோவில் மற்றும் கிரிவலப் பாதை பகுதியில் பக்தர்களுக்குத் தேவையான இடங்களில் போதுமான கழிவறைகளும், குடிநீர் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட இருக்கின்றன.

அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும் என்றும், முறையான தரமான உணவுகள் வழங்க வேண்டும் இல்லையேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திருவண்ணாமலை மாவட்ட கலெக்டர் தர்ப்பகராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் சித்ரா பவுர்ணமி தினத்தன்று திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் இந்த ஆண்டும் வி.ஐ.பி. தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் போலி நெய் தீபம் விற்பனை செய்யவும், கற்பூரம் ஏற்றவும் தடை விதிக்கப்படுவதாக அம்மாவட்ட கலெக்டர் தர்ப்பகராஜ் தெரிவித்துள்ளார்.

**மரம் மனிதனின் உரம்**

# பாகிஸ்தானில் விபத்து: 16 பேர் பலி

**லாகூர், ஏப். 23-**

பாகிஸ்தானின் வேன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குழந்தைகள் உள்பட 16 பேர் பலியாகியுள்ளனர்.

சிந்து மாகாணத்தின் பதின் எனும் பகுதியை நோக்கி பஞ்சாப் மாகாணத்தின் லபாரியைச் சேர்ந்த கொல்ஹி எனும் பழங்குடியின மக்கள் நேற்றுமுன்தினம் ஒரு வேனில் பயணம் செய்து கொண்டிருந்தனர். இந்நிலையில், மலைப்பகுதியில் அதிவேகமாகச் சென்ற அந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து ஒரு பள்ளத்தாக்கில் கவிழ்ந்துள்ளது. இதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட 16 பேர் சம்பவயிடத்திலேயே பலியாகினர். மேலும், இந்த விபத்தில் 30-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த அதிகாரிகள் படுகாயமடைந்தவர்களை மீட்டு உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வரும் பலரின் உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாகவுள்ளதாகவும் இதனால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

# பேச அனுமதி கொடுக்கவில்லை என்பது ஜனநாயக படுகொலை

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

**சென்னை, ஏப். 23-**

தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் பேச அனுமதி கொடுக்கவில்லை என்பது ஜனநாயக படுகொலை என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

டாஸ்மாக் நிறுவனங்களில் நடைபெற்றதாக கூறப்படும் முறைகேடு குறித்து சட்டசபையில் பேச எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். முன்னதாக டாஸ்மாக் நிர்வாகம் மீதான முறைகேடு புகார் குறித்து எடப்பாடி பழனிசாமி பேச முற்பட்டார்,

அப்போது சபாநாயகர் அப்பாவு கூறுகையில், "அ.தி.மு.க. உறுப்பினர்கள் 2 பேர் விவாதத்தில் பேச உள்ளபோது எதிர்க்கட்சி தலைவர் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது. மானியக் கோரிக்கை மீது பங்கேற்க உள்ள அ.தி.மு.க. உறுப்பினர்கள் முதலில் பேசட்டும். நினைத்த நேரத்தில் பேச அனுமதிக்க முடியாது. விதிகளிலும், மரபுகளிலும் இல்லா தவற்றை பேச ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்" என்று தெரிவித்தார். மேலும் பயமா என்று அ.தி.மு.க.வினர் கேள்வி எழுப்பியதற்கு, யாரும் பயந்தவர்கள் இல்லை என்று சபாநாயகர் அப்பாவு பதில் அளித்தார்.

எதிர்க்கட்சி தலைவருக்கு மற்றவர்களை விட அதிக நேரம் பேச உரிமை உண்டு. ஆனால் திடீரென பேச முடியாது என்று அவை முன்னவர் துரை முருகன் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய எடப்பாடி பழனிசாமி, டாஸ்மாக்கில் நடைபெற்ற அமலாக்கத்துறை சோதனை குறித்து பேச அரசு மறுக்கிறது. மக்கள் பிரச்சினையை பேசுவதற்கு தான் சட்டசபை, அங்கு பேச அனுமதி கிடையாது என்று உறுதியாக கூறுகின்றனர். டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக அமலாக்கத்துறையின் அறிக்கை குறித்து தமிழக அரசு பதில் சொல்ல வேண்டும். பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் பேச அனுமதி கொடுக்கவில்லை என்பது "ஜனநாயக படுகொலை" என்று கூறினார்.

# தமிழகத்தில் டாஸ்மாக் வருவாய் ரூ. 48,344 கோடியாக அதிகரிப்பு

**சென்னை, ஏப்.23-**

கடந்த 2024-2025ம் நிதியாண்டில் டாஸ்மாக் மூலம் 48,344 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் டாஸ்மாக் விற்பனை கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.2,489 கோடி அதிகரித்துள்ளதாக தமிழக அரசின் கொள்கை விளக்க குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் கடந்த 2024 – 2025ம் நிதியாண்டில் டாஸ்மாக் மூலம் 48,344 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

2021 -2022ம் நிதியாண்டில் ரூ. 36,050 கோடியும், 2022 - 2023ம் நிதியாண்டில் ரூ.44,121 கோடியும், 2023 - 2024ம் நிதியாண்டில் ரூ.45,855 கோடியும், 2024 – 2025ம் நிதியாண்டில் ரூ.48,344 கோடியும் வருவாய் கிடைத்துள்ளது. இதன்படி 2023 - 2024ம் நிதியாண்டை விட, 2024 - 2025ம் நிதியாண்டில் ரூ.2489 கோடி ரூபாய் வருவாய் கூடுதலாக கிடைத்துள்ளது.

அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ததன் மூலமாக 2024-25 -ஆம் ஆண்டில் (31.03.2025 வரை) சிறப்புக் கட்டணமாக அரசுக்கு ரூ.62.88 கோடி மற்றும் சேவைக் கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு ரூ.32.52 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது.மேலும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மூலம் தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள், வெளி நாடுகளுக்கு பீர் ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளித்து ஆணை பிறப்பித்துள்ளது.

கடந்த 2024 - 2025 ஆம் ஆண்டில் (31 மார்ச் 2025 வரை), மற்ற மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள், பிற நாடுகளுக்கு 21,80,465 பெட்டிகள் (cases) பீர் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் ரூ.777.07 லட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பீர் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி இணைய வழியாக வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊட்டி துணைவேந்தர்கள் மாநாட்டில் குடியரசு துணைத்தலைவர் பங்கேற்பு

## ஆளுநர் மாளிகை அறிவிப்பு

**சென்னை, ஏப். 23-**

ஊட்டியில் வரும் ஏப்.25, 26 தேதிகளில் நடைபெறும் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மாநாட்டில் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் கலந்து கொண்டு மாநாட்டினைத் தொடங்கி வைக்க உள்ளதாக ஆளுநர் மாளிகை அறிவித்துள்ளது.


இதுகுறித்து, ராஜ்பவன் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் உள்ள மாநில, மத்திய மற்றும் தனியார் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்களின் துணைவேந்தர்கள் மாநாடு வரும் ஏப்ரல் 25 மற்றும் 26 தேதிகளில் ஊட்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற உள்ளது. துணைவேந்தர்கள் பங்கேற்கும் இந்த மாநாடு தொடர்ந்து 4-வது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் ஏப்.25-ம் தேதி முதன்மை விருந்தினராக குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் பங்கேற்று, மாநாட்டை தொடங்கி வைக்கிறார். தமிழக ஆளுநரும், மாநில பல்கலைக்கழகங்களின் வேந்தருமான ஆர்.என்.ரவி, மாநாட்டுக்கு தலைமை தாங்குகிறார்.

கல்வித்துறை, அரசு மற்றும் தொழிற்துறையைச் சேர்ந்த சிறந்த பேச்சாளர்கள் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுகின்றனர். மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அஜய் குமார் சூட் 'அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் எல்லைகள்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகிறார்.

இம்மாநாடு தமிழகம் முழுவதும் உள்ள மாநில, மத்திய மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களின் துணைவேந்தர்களை ஒன்றிணைத்து பணியாற்றுவதையும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதையும், உயர் கல்விக்கான புதுமையான அணுகுமுறைகளை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# யு.பி.எஸ்.சி. தேர்வு முடிவுகள் வெளியீடு: தமிழகத்தில் சிவச்சந்திரன் முதலிடம்

**சென்னை, ஏப்.23-**



2024 ஆம் ஆண்டுக்கான யு.பி.எஸ்.சி. சிவில் சர்வீஸ் தேர்வின் இறுதி முடிவுகள் நேற்று (ஏப். 22) வெளியிடப்பட்டுள்ளன.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., ஐ.ஆர்.எஸ். உள்ளிட்ட குடிமைப் பணிகளுக்கு மத்திய பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) நடத்தும் சிவில் சர்வீஸ் தேர்வானது, முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு என மூன்று படிநிலைகள் கொண்டது. ஆண்டுக்கு ஒருமுறை இந்தத் தேர்வு நடத்தப்பட்டு வரும் நிலையில், 2024 ஆம் ஆண்டுக்கான இறுதித் தேர்வு முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன. https://upsc.gov.in/ என்ற இணையதளத்தில் தேர்வர்கள் முடிவுகளை அறியலாம். கடந்த 2024 ஜூன் 16 ஆம் தேதி முதல்நிலைத் தேர்வும் செப்டம்பர் மாதத்தில் முதன்மைத் தேர்வும் தொடர்ந்து 2025 ஜனவரி - ஏப்ரல் மாதங்களில் நேர்காணலும் நடைபெற்றது. அதன்படி நேற்று வெளியான இறுதி தரவரிசைப் பட்டியலில் மொத்தமாக 1,009 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தமிழகத்தில் சிவச்சந்திரன் என்ற மாணவர் முதலிடமும் அகில இந்திய அளவில் 23-ம் இடமும் பெற்றுள்ளார். இவர் தமிழக அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் படித்த 50 பேர் இந்த தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜெய்ப்பூர் ஆம்பர் கோட்டையை பார்வையிட்ட ஜே.டி. வான்ஸ்

**ஜெய்ப்பூர், ஏப்.23-**



இந்தியா வந்துள்ள அமெரிக்கா துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ், நேற்று குடும்பத்துடன் ஜெய்ப்பூர் ஆம்பர் கோட்டையை பார்வையிட்டார்.

4 நாட்கள் பயணமாகஅமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் குடும்பத்துடன் இந்தியா வந்துள்ளார். அவரது மனைவியும் இந்திய வம்சாவளி பெண்ணுமான உஷா, குழந்தைகள் எவான், விவேக், மிராபெல் ஆகியோரும் இந்தியா வந்துள்ளனர்.

டெல்லியில் உள்ள சுவாமி நாராயணன் அசர்தாம் கோவிலுக்கு ஜே.டி.வான்ஸ் குடும்பத்துடன் நேற்று முன்தினம் சாமி தரிசனம் செய்தார். அதன்பின்னர், நேற்று முன்தினம் மாலை ஜே.டி. வான்ஸ், பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது ஜே.டி.வான்ஸ் குடும்பத்தினரும் உடன் இருந்தனர்.

இந்நிலையில், இந்திய பயணத்தின் 2வது நாளான நேற்று ஜே.டி.வான்ஸ் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் சென்றுள்ளார். அங்கு யுனெஸ்கோ பாரம்பரிய சின்னமாக விளங்கும் ஆம்பர் கோட்டையை ஜே.டி. வான்ஸ் குடும்பத்துடன் பார்வையிட்டார். மேலும், அங்கு நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளையும் அவர் குடும்பத்துடன் கண்டு களித்தார்.

ஜெய்ப்பூர் பயணத்தை முடித்துக்கொண்டு ஜே.டி. வான்ஸ் இன்று ஆக்ரா செல்கிறார். அங்கு தாஜ்மகாலை அவர் குடும்பத்துடன் சுற்றிப் பார்க்க உள்ளார்.

# பென்னாகரம் புளிக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை: அமைச்சர் உறுதி

**சென்னை, ஏப்.23-**

பென்னாகரம் புளிக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டப்பேரவையில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் பென்னாகரம் தொகுதி எம்.எல்.ஏ. ஜி.கே.மணி பேசும்போது, "பென்னாகரம் தொகுதியில் புளி ஏராளமாக சாகுபடி செய்யப்படுவதால் அதனை பதப்படுத்த அரசு மானியத்துடன் கடன் வழங்குமா? இப்பகுதியில் விளையும் புளிக்கு அரசு புவிசார் குறியீடு பெற்று தருமா?" என கேள்வி எழுப்பினார். அதற்கு குறு, சிறு, நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலளித்து பேசியதாவது: "தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் 445 ஏக்கர் பரப்பளவில் புளி சாகுபடி செய்யப்பட்டு, 2500 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் புளி பதப்படுத்தும் தொழில் செய்வதற்கு 10 தொழில்முனைவோருக்கு ரூ.34 லட்சம் மானியத்துடன் ரூ.2.89 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

புவிசார் குறியீடானது வேளாண் பொருள்கள், உணவு பொருள்கள், கைவினை பொருள்கள் உற்பத்தி சார்ந்த பொருள்களுக்கு வழங்கப்படுகிறது. இந்திய அளவில் 69 பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற்று தமிழகம் 2-ம் இடத்தில் உள்ளது. ஒரு பொருளுக்கு புவிசார் குறியீடு பெற வேண்டும் என்றால், அப்பொருள் ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். அதற்கான வரலாற்று சான்றும் இருக்க வேண்டும். அப்பொருளுக்கும் அப்பகுதிக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உள்ள தொடர்பு உறுதிபடுத்தப்பட வேண்டும். அதற்குரிய ஆவணங்களை தேடி பெற்று, புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்," என்று அவர் பதில் அளித்தார்.

# மோசடி வழக்கில் நடிகர் மகேஷ் பாபுவுக்கு அமலாக்கத்துறை சம்மன்

**ஹைதராபாத், ஏப்.23-**



ரியல் எஸ்டேட் நிறுவன நிதி மோசடி தொடர்பான வழக்கில் வரும் 28-ம் தேதி ஹைதராபாத் அலுவலகத்தில் ஆஜராக வேண்டுமென தெலுங்கு நடிகர் மகேஷ் பாபுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பி உள்ளது.

சாய் சூர்யா மற்றும் சுரானா என இரண்டு ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் புதிய புராஜக்டுகளை ஆமோதித்து எண்டார்ஸ்மெண்ட் செய்திருந்தார் நடிகர் மகேஷ் பாபு. இதற்காக சுமார் 5.9 கோடி ரூபாயை அவர் பெற்றுள்ளதாக தகவல். இதில் ரூ.3.4 கோடி காசோலையாகவும், ரூ.2.5 கோடி ரொக்கமாகவும் பெற்றுள்ளதாக தகவல்.

தெலங்கானா மாநிலத்தில் சுரானா நிறுவனத்தின் நிர்வாகிகளில் ஒருவரான நரேந்திர சுரானா மற்றும் சாய் சூர்யா டெவலப்பர்ஸ் உரிமையாளர்களில் ஒருவரான சதிஷ் சந்திர குப்தா மற்றும் பலருக்கு எதிராக பதிவான புகார்களின் அடிப்படையில் அமலாக்கத் துறை இந்த மோசடி வழக்கை விசாரித்து வருகிறது.

ஒரே மனையை பலருக்கு விற்பனை செய்தது, போலியான பதிவு உத்தரவாதத்தை அளித்தது, ஒழுங்கு முறை சாராத மனை பிரிவுகளுக்கு மனை வாங்க முன் வந்தவர்களிடம் இருந்து முன்பணம் பெற்றது என இந்த நிறுவனங்கள் கோடி கணக்கிலான ரூபாயை மோசடி செய்ததாக புகார் உள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாக மகேஷ் பாபுவின் செயல் மேலும் பலரை மோசடி வலையில் விழ செய்தது. இந்த மோசடியை செயல்படுத்தியதில் மகேஷ் பாபுவுக்கு தொடர்பு இல்லை என்றாலும், அதற்காக இந்த நிறுவனங்களிடம் இருந்து அவர் பெற்ற பணம் மோசடி மூலம் பெறப்பட்டதா என்ற கோணத்தில் விசாரணை நடைபெறுகிறது.

# சென்னையில் 3 பேருக்கு கொரோனா

**சென்னை, ஏப்.23-**

சென்னையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 3 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா தொற்று பாதிப்பு தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளாக கட்டுக்குள் உள்ளது. இருப்பினும் கொரோனா வைரஸ் தீவிரத்தை, பொது சுகாதாரத்துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. காய்ச்சல், சளி, இருமல் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது.

இந்த நிலையில், தமிழகத்தில் நேற்று முன்தினம் 32 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில், சென்னையைச் சேர்ந்த, 2 ஆண்கள், ஒரு பெண் என 3 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்போது 3 பேரும் நலமுடன் உள்ளனர் என்றும் கொரோனா தொற்று பரவும் வகையிலான பாதிப்பு இல்லை என்றும் பொது சுகாதாரத்துறை தெரிவித்து உள்ளது.

# கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கின் முக்கிய குற்றவாளிகளுக்கு ஜாமீன்

## சென்னை ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஏப். 23-**

கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கில் முக்கிய குற்றவாளிகளான தாமோதரன், கன்னுக்குட்டி ஆகியோருக்கு சென்னை ஐகோர்ட் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரத்தில் கடந்த ஆண்டு ஜுன் 19ம் தேதி விஷ சாராயம் குடித்த 67 பேர் மரணம் அடைந்தனர். இந்த வழக்கில் விஷ சாராயம் விற்பனை செய்வது, கடத்தியது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் 21 பேர் கைது செய்யபட்ட வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

இந்த நிலையில் இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக கைது செய்யப்பட்ட சாராய வியாபாரிகள் கன்னுக்குட்டி என்ற கோவிந்தராஜ் மற்றும் தாமோதரன் ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது சி.பி.ஐ. தரப்பில், இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான தாமோதரன் மற்றும் கன்னுக்குட்டி என்ற கோவிந்தராஜுக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என தெரிவிக்கபட்டது. மனுதாரர்கள் தரப்பில், 10 மாதங்களுக்கு மேலாக சிறையில் உள்ளதால்,

ஜாமீன் வழங்க வேண்டும் என தெரிவிக்கபட்டது. இதையடுத்து தாமோதரன் மற்றும் கன்னுக்குட்டி என்ற கோவிந்தராஜுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கிய நீதிபதி உத்தரவிட்டார். மறு உத்தரவு வரும் வரை விசாரணை அதிகாரி முன்பு தினசரி ஆஜராக வேண்டும் என்று அவர்களுக்கு நிபந்தனை விதித்தார்.

# யு.பி.எஸ்.சி. சிவில் சர்வீஸ் தேர்வில் உ.பி.யை சேர்ந்த மாணவி முதலிடம்

**புதுடெல்லி, ஏப். 23-**



2024 ஆம் ஆண்டுக்கான யு.பி.எஸ்.சி. சிவில் சர்வீஸ் தேர்வின் இறுதி முடிவுகள் (ஏப். 22) வெளியிடப்பட்டுள்ளன. உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சக்தி துபே என்ற மாணவி முதலிடம் பெற்றுள்ளார்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., ஐ.ஆர்.எஸ். உள்ளிட்ட குடிமைப் பணிகளுக்கு மத்திய பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) நடத்தும் சிவில் சர்வீஸ் தேர்வானது, முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு என மூன்று படிநிலைகள் கொண்டது.

ஆண்டுக்கு ஒருமுறை இந்தத் தேர்வு நடத்தப்பட்டு வரும் நிலையில், 2024 ஆம் ஆண்டுக்கான இறுதித் தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. https://upsc.gov.in/ என்ற இணையதளத்தில் தேர்வர்கள் முடிவுகளை அறியலாம். கடந்த 2024 ஜூன் 16 ஆம் தேதி முதல்நிலைத் தேர்வும் செப்டம்பர் மாதத்தில் முதன்மைத் தேர்வும் தொடர்ந்து 2025 ஜனவரி - ஏப்ரல் மாதங்களில் நேர்காணலும் நடைபெற்றது.

அதன்படி வெளியான இறுதி தரவரிசைப் பட்டியலில் மொத்தமாக 1,009 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சக்தி துபே என்ற மாணவி முதலிடம் பெற்றுள்ளார். ஹர்ஷிதா கோயல் என்பவர் இரண்டாமிடமும் டோங்க்ரே அர்ஷித் பராக் என்பவர் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்றவர்களில் 335 பேர் பொதுப்பிரிவினர், 109 பேர் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர், 318 பேர் ஓபிசி, 160 பேர் எஸ்சி, 87 பேர் எஸ்டி, 45 பேர் மாற்றுத்திறனாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 4 நாட்களுக்கு வெப்பம் மேலும் அதிகரிக்கும்

## வானிலை மையம் தகவல்

**சென்னை, ஏப். 23-**

தமிழகத்தில் அடுத்த 4 நாட்களுக்கு வெப்பம் அதிகரிக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:- தென் தமிழக கடலோரப்பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

24-04-2025 முதல் 28-04-2025 வரை: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 26-04-2025 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு. எனினும், ஓரிரு இடங்களில் சற்று உயரக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# கவர்ச்சிகரமான முதலீட்டு திட்டங்கள்: தமிழக டி.ஜி.பி. சங்கர் ஜிவால் எச்சரிக்கை

**சென்னை, ஏப். 23-**

அதிக லாபம் தரும் கவர்ச்சிகரமான முதலீட்டு தகவல்களை நம்ப வேண்டாம் என்று டி.ஜி.பி. சங்கர் ஜிவால் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாநில இணையவழி குற்றப்பிரிவு போலீசார், இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சியில் ஆன்லைன் முதலீட்டு மோசடி, உதவித்தொகை மோசடி மற்றும் டிஜிட்டல் கைது மோசடி போன்ற பரந்த அளவிலான சைபர் குற்றங்களில் ஈடுபட்ட 12 சைபர் குற்றவாளிகளை கைது செய்துள்ளனர். இதனை குறிப்பிட்டு டிஜிபி சங்கர் ஜிவால் போலீசாரை வெகுவாக பாராட்டியுள்ளார். மேலும், சைபர் குற்றங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க பின்வரும் ஆலோசனைகளை வழங்கி பொதுமக்களை எச்சரித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறி இருப்பதாவது;-

எந்தவொரு ஆன்லைன் வேலை வாய்ப்பும் அளவுக்கு அதிகமாக மெருகூட்டப்பட்டதாகத் தோன்றினால், உண்மையான தனிப்பட்ட விவரங்கள் இல்லை என்றால் எச்சரிக்கையாக இருங்கள். அதிக லாபத்தை வழங்கும் கவர்ச்சிகரமான முதலீட்டு தகவல்களை நம்ப வேண்டாம். அவர்கள் அதிகப்படியான இலாபங்களுக்கு உத்தரவாதம் அளித்தால், மோசடிக்கான வாய்ப்புகள் அதிகம். மக்கள் விழிப்புடன் இருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். தனிப்பட்ட அல்லது நிதி தகவல்களை அறியப்படாத நபர்களுடன் தொலைபேசியில் பகிர்ந்து கொள்ள வேண்டாம். வங்கிக் கணக்குகளுக்கு இரண்டு காரணி அங்கீகாரத்தைப் பயன்படுத்தவும். மேலும், சைபர் மோசடியாளர்களால் நிதி மோசடிகளுக்கு இது போன்ற கணக்குகள் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்பதால், தங்கள் வங்கிக் கணக்குகள் அல்லது கிரிப்டோகரன்சி பணப்பையை கடன் வழங்குவதற்கு எதிராக பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இது போன்ற செயல்களில் யாராவது ஈடுபட்டிருப்பது கண்டறியப்பட்டால், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அரசு முகமைகள் அல்லது கல்வி நிறுவனங்களின் அதிகாரப்பூர்வ வலைத்தளங்களில் கிடைக்கும் தகவல்களை மட்டுமே நம்புங்கள். கல்வி உதவித்தொகை வழங்கும் கோரப்படாத அழைப்புகள் அல்லது செய்திகளுக்கு பதிலளிப்பதைத் தவிர்க்கவும். https://ssp.tn.gov.in, https://scholarshipgov.in/All-Scholarship போன்ற இணையதளங்களில் மத்திய மற்றும் மாநில அரசு உதவித்தொகைக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். ஒரு வலைத்தளம் அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்க, அதன் டொமைன் gov.in உடன் முடிவடைகிறதா என்று சரிபார்க்கவும். ஆதார் எண்கள், வங்கிக் கணக்குத் தகவல் அல்லது ஓடிபி போன்ற முக்கியமான விவரங்களை ஒருபோதும் தொலைபேசி அழைப்புகள் அல்லது வீடியோ அழைப்புகளில் பகிர்ந்து கொள்ள வேண்டாம். அரசு உதவித்தொகைக்கு கியூஆர் குறியீடுகளை ஸ்கேன் செய்யவோ அல்லது நிதி வழங்குவதற்கு பணம் செலுத்தவோ தேவையில்லை. நீங்கள் உங்கள் பள்ளி மூலம் உதவித்தொகைக்கு விண்ணப்பித்திருந்தால், பள்ளி அதிகாரிகளுடன் மேலும் ஏதேனும் தொடர்பு இருந்தால் சரிபார்க்கவும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழ்நாட்டில் கனிமங்களுக்கு உயர்த்தப்பட்ட ராயல்டியை குறைக்கவும், புதிதாக விதிக்கப்பட்ட சிறு கனிம நில வரி விதிப்பை கைவிடவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் தமிழ்நாட்டில் உயர்த்தப்பட்டுள்ள கட்டுமானப் பொருட்களின் விலைகள் குறைவதற்கு தமிழக அரசு வகை செய்ய வேண்டும்.

- ராமதாஸ்



சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் எந்த இடத்திலும், தமிழ்நாடு பல்கலைக்கழக வேந்தராக கவர்னரே தொடர்வார் எனக் குறிப்பிடப்படவில்லை. ஆனால், தமிழ்நாடு கவர்னர் தமிழ்நாடு சட்டமன்றத்தின் வழிகாட்டுதல்களைப் பற்றிக் கவலைப்படாமல் தான்தோன்றித்தனமாக செயல்பட்டு வருகிறார். மத்திய அரசு அவரை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

- முத்தரசன்



மதுவை ஒழிக்க வேண்டுமென நாங்கள் நினைக்கிறோம். ஊழல், லஞ்சத்தை ஒழிக்க நினைக்கிறோம். எந்த கட்சியுடன் சேர்ந்து ஒழிக்கலாம். ஊழல், லஞ்சம் இல்லாத நேர்மையான நிர்வாகத்தை எந்த கூட்டணியில் சேர்ந்து கொடுக்கலாம்? நாங்கள் மக்களுடனே தஞ்சம். எந்த கூட்டணிக்கும் நான் வரவில்லை.

- சீமான்



அரசு உதவி பெறும் கல்லூரிகளில் குரூப் டி பணியிடங்களை ஒழித்து விட்டு, குத்தகை நியமனங்களுக்கு அனுமதி அளித்து உயர்கல்வித்துறை மூலம் கடந்த 3-ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள 66-ம் எண் கொண்ட அரசாணையை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும். அனைத்துத் துறைகளிலும் நிரந்தர அடிப்படையிலேயே நியமிக்கப்படும் என்று அரசு அறிவிக்க வேண்டும்.

- அன்புமணி

## திருமங்கலத்தில் 3 இடங்களில்

# மேம்பாலங்கள் அமைத்திட பூமிபூஜை: மாணிக்கம் தாகூர் எம்.பி. துவக்கி வைத்தார்



**திருமங்கலம், ஏப். 23-**

விருதுநகர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம் பகுதி தேசிய நெடுஞ்சாலை எண் 44-ல் விபத்துக்களை தடுத்திடும் வகையில் ரூ.97.75 கோடி செலவில் மூன்று இடங்களில் அணுகுசாலையுடன் கூடிய மேம்பாலங்கள் அமைத்திடும் பணிக்கான பூமிபூஜையில் விருதுநகர் எம்.பி ப.மாணிக்கம்தாகூர் பங்கேற்று பணிகளை துவக்கி வைத்தார்.

விருதுநகர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருநகர்-தனக்கன்குளம்,கள்ளிக்குடி-டி.கல்லுப்பட்டி மற்றும் சிவரக்கோட்டை பகுதி தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படும் விபத்துக்களால் ஏராளமான உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகிறது.இதனை தவிர்த்திடும் வகையில் மேற்கண்ட முன்று இடங்களில் மேம்பாலங்கள் அமைத்திட விருதுநகர் எம்.பி.,ப.மாணிக்கம்தாகூர் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பலனாக தேசிய நெடுஞ்சாலை எண்.44ல் அதிக விபத்துக்கள் நடந்திடும் தனக்கன்குளம்-திருநகர் சந்திப்பில் ரூ.42.69கோடி செலவிலும், கள்ளிக்குடி-டி.கல்லுப்பட்டி பகுதியில் ரூ.29.01கோடி செலவிலும், சிவரக்கோட்டை நெடுஞ்சாலை பகுதியில் ரூ.26.05கோடி செலவிலும் என ரூ.97.75 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலங்கள் கட்டுவதற்கு மத்திய நெடுஞ்சாலைத் துறை அனுமதி வழங்கியது.

இதையடுத்து திருமங்கலம் பகுதியிலுள்ள தேசிய நெடுஞ்சாலை எண்.44-ல் புதிய உயர்மட்ட மேம்பாலங்கள் அமையவுள்ள தனக்கன்குளம்,சிவரக்கோட்டை, கள்ளிக்குடி ஆகிய இடங்களில் நடைபெற்ற பூமிபூஜை விழாக்களில் விருதுநகர் எம்.பி ப.மாணிக்கம்தாகூர் சிறப்பாளராக கலந்து கொண்டு ரூ.97.75கோடி மதிப்பீட்டிலான கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார்.இதையடுத்து செய்தியாளர்களை சந்தித்த விருதுநகர் எம்.பி ப.மாணிக்கம்தாகூர் கூறுகையில்:-

மேற்கண்ட பகுதிகளில் உயிரிழப்புகளை தடுத்திடும் வகையில் இந்த மேம்பாலங்கள் அமைத்திட நிதிஒதுக்கிய மத்திய அமைச்சர் நிதின்கட்கரிக்கு நன்றி தெரிவிக்கிறேன். பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கூடிய அமைச்சர்களின் அவரும் ஒருவர்.பாஜக-அதிமுக கூட்டணி ஏற்கெனவே மூன்று முறை தோல்வி அடைந்த கூட்டணி.மக்களால் நிராகரிக்கப்பட்ட கூட்டணி.இந்த கூட்டணியால் தமிழகத்திற்கு ஆபத்து.ஆளுநர் ரவி மீண்டும் ஒருமுறை தவறு செய்கிறார்.

அவருக்கு ஆதரவாக அமித்ஷா போன்றவர்கள் செயல்படுவது ஜனநாயக படுகொலை.உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு பின்பு அவர் அப்படி செய்வது நியாயமற்றது. என்று தெரிவித்தார். இந்நிகழ்ச்சிகளில் காங்கிரஸ் மற்றும் தி.மு.க கூட்டணி கட்சி நிர்வாகிகள்,நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



**முதுகுளத்தூர் அருகே உள்ள காக்கூர் கிராமத்தில் கடந்த 3 மாதங்களாக காவிரி குடிதண்ணீர் வராததால் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தேவர்புரம் கிராமத்திற்கு சென்று தள்ளுவண்டியில் தண்ணீர் எடுக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

## வத்தலக்குண்டு

# பர்ஸ்ட் ஸ்டெப் பப்ளிக் சி.பி.எஸ்.இ. பள்ளியில் பட்டமளிப்பு விழா



**வத்தலகுண்டு, ஏப்.23-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு கணவாய்பட்டியில் உள்ள பர்ஸ்ட் ஸ்டெப் பப்ளிக் சீனியர் செக்கண்டரி சிபிஎஸ்இ பள்ளியில் யூகேஜி வகுப்பு மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.


பள்ளி தலைவர் கிருஷ்ணமூர்த்தி விழாவிற்கு தலைமை தாங்கினார். பள்ளி தாளாளர் கயல்விழி முன்னிலை வகித்தார். நான்காம் வகுப்பு மாணவி லயா கீர்த்தி அனைவரையும் வரவேற்றார்.வத்தலகுண்டு சார்பு காவல் ஆய்வாளர் ஷேக் அப்துல்லா விழாவில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டம் பரிசுகள் அளித்து பாராட்டுக்கள் தெரிவித்து வாழ்த்து கூறினார்.

அவர் பேசுகையில், வத்தலகுண்டு சுற்று வட்டாரத்தில் முதன்முதலாக சிபிஎஸ்இ பள்ளி நிறுவி ,இன்று வரை வெற்றிகரமாக நடத்தி வரும் பள்ளி நிர்வாகத்தை பாராட்டினார். மேலும் பெற்றோர்களுக்கும் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.மாணவர்கள் வீட்டில் தினமும் ஒரு மணி நேரம் நாள் தவறாது படித்து வந்தால் அவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவதை முக்கியமாக ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். போன்ற உயர் பதவிகள் அடைவதை யாரும் தடுக்க முடியாது என்று கூறி தன் வாழ்வில் நேர்முக தேர்வில் நன்றாக தொடர்ச்சியாக பட்டியதன் வெற்றி பெற்றதின் ரகசியத்தை கூறி மாணவர்களை உற்சாகப் படுத்தினார்.பிறகு பெற்றோர்களுடன் கலந்துரையாடி வினா எழுப்பி விடை கூறியவர்களுக்கு பரிசுகள் அளித்து பாராட்டினார்.மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இறுதியில் பள்ளி முதல்வர் சண்முகவேல் பெற்றோர்களுக்கு அடுத்து வரும் கல்வி ஆண்டின் செயல் விளக்கத்தினை கூறினார்.நான்காம் வகுப்பு மாணவி ரக்ஷிதா நன்றியுரை கூறினார். மாணவிகள் ஹேமாஶ்ரீ , ரஹிமா வாஃபிகா விழாவினை தொகுத்து வழங்கினார்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆசிரிய ஆசிரியைகள் சிறப்பாக செய்திருந்தனர்.

## நத்தம் அருகே

# நடராஜருக்கு சிறப்பு பூஜை



**நத்தம், ஏப்.23-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டூரில் அண்ணாமலையார் கோவிலில் அமைந்துள்ள நடராஜர் சன்னதியில் சித்திரை திருவோண நாளை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது.

இதையொட்டி நடராஜருக்கு செண்பகபூ, தாமரை வில்வ மாலைகளை கொண்டு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பால்,பழம், இளநீர், திருமஞ்சனம், தேன், சந்தனம் உள்ளிட்ட 32 வகையான அபிஷேகங்களும், மஹா தீபாராதனைகளும் நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

## சிவகங்கையில் பயங்கரம்:

# அரசு பேருந்து மீது டீசல், எரிவாயு டேங்கர் லாரிகள் அடுத்தடுத்து மோதல்: 20 பேர் காயம்



**சிவகங்கை, ஏப். 23-**

சிவகங்கை அருகே அரசு பேருந்து மீது டீசல், எரிவாயு டேங்கர் லாரிகள் அடுத்தடுத்து மோதி விபத்துக்கு உள்ளானதில் 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மேலும் சாலையில் டீசல் ஓடியது.

மதுரையில் இருந்து சிவகங்கை நோக்கி மதுரை - தொண்டி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று காலை எரிவாயு மற்றும் டீசல் டேங்கர் லாரிகள் அடுத்தடுத்து வந்தன. திருமாஞ்சோலையை அடுத்து செம்பூர் என்ற இடத்தில் வந்தபோது, டீசல் டேங்கர் லாரி, எரிவாயு டேங்கர் லாரியை முந்த முற்பட்டது. அப்போது சிவகங்கையில் இருந்து மதுரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரசு பேருந்து மீது டீசல் டேங்கர் லாரி மோதியது. தொடர்ந்து எரிவாயு லாரியும் பேருந்தில் மோதியது. இதில் பேருந்தில் இருந்த பயணி ஒருவர் வெளியே தூக்கி வீசப்பட்டார். அவருடன் சேர்த்து பேருந்தில் பயணித்த 20-க்கும் மேற்பட்ட பயணிகளுக்கு காயம் ஏற்பட்டது.

மேலும் டீசல் டேங்கர் லாரி ஓட்டுநரின் கால் இடிபாடுகளில் சிக்கி கொண்டது. அங்கிருந்தோர் காயமடைந்தோரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை, மதுரை அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். மேலும் டீசலும் கசிந்து சாலையில் ஓடியது. தகவலறிந்து வந்த பூவந்தி போலீஸார், சிவகங்கை தீயணைப்பு துறையினர் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு, போக்குவரத்தை சீர் செய்தனர்.

# கடலில் தவறி விழுந்து பாம்பன் மீனவர் பலி

**ராமேசுவரம், ஏப்.23-**

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் பகுதியில் இருந்து பஹ்ரைன் நாட்டிற்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் கடலில் மீன் பிடிக்கும் போது தவறி விழுந்து உயிரிழந்ததால் அவர்களின் உடலை கொண்டு வருவதற்கும் மீனவரை இழந்த குடும்பத்தினருக்கு அரசு நிவாரண வழங்க கோரிக்கைவிடுத்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் தாலுகா பாம்பன் பகுதியில் காமராஜர் நகர் சேர்ந்த சூசை மரியான் மகன் சீமோன்சன் (33) என்பவர் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் தேதி பஹ்ரைன் நாட்டில் ஜாவ் என்ற பகுதியில் மீன் பிடிக்கச் சென்றுள்ளார். அதன் பின்னர் ஒரு மாதம்



கடலில் மீன் பிடித்துக் கொண்டு இந்த மாதம் கடந்த 20-ம் கரைக்கு திரும்பும் போது படகிலிருந்து கடலில் தவறி விழுந்து உயிரிழந்ததாக அவருடன் மீன் பிடிக்க சென்ற சக மீனவர்கள் ராமேஸ்வரத்தில் உள்ள மீறவலின் குடும்பத்தினருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் கடலில் விழுந்து உயிரிழந்த மீனவர்க்கு செல்சியா (25) என்ற மனைவியும் இரண்டு ஆண் குழந்தைகளும் உள்ளன.

இந்த நிலையில் உயிரிழந்த மகன் சீமோன்சனின் உடலை ராமேஸ்வரம் பகுதிக்கு கொண்டு வருவதற்கு மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதுபோல மீனவரை இழந்து வாடும் நிறைமாத கர்ப்பணி மனைவி மற்றும் அவரது குழந்தைகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு நிவாரண வழங்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சியரிடம் மீனவரின் தந்தை சூசை மரியான் மனு கொடுத்து கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டதால் லாரி தொழில் பாதிப்பு: பரமத்தி லாரி உரிமையாளர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

**ப.வேலூர், ஏப்.23-**

பரமத்தி வேலூர் தாலுக்கா லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில். ஸ்டெர்லைட் காப்பர் நிறுவனத்தை மீண்டும் திறக்கக் கோரி கவண ஈர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஸ்டெர்லைட் நிறுவனத்தின் மூடல் என்பது தமிழகம், கேரளா, ஆந்திரா, தெலுங்கானா மற்றும் கர்நாடக மாநில லாரி ஓட்டுநர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் கடுமையாக பாதித்துள்ளது.

ஆலையின் செயல்பாட்டின் போது தினசரி 1000 லாரிகள் இயக்கப்பட்டு முக்கிய வாழ்வாதாரத்தை வழங்கி வந்தது. இந்நிலையில் 600-க்கு மேற்பட்ட லாரி உரிமையாளர்கள் தாங்களுக்கு வேறு வழியின்றி ஓட்டுநர்களாக மாறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. இதில் ஓட்டுநர்கள், உதவியாளர்கள், மற்றும் அவர்களது குடும்பத்தினர் வேலையில்லா திண்டாட்டத்தாலும், பல்வேறு தொடர் தொழில்கள் மூடப்படுவதால் நிதி நெறுக்காடியாலும் வாழ்கை சுமையை தாங்கமுடியாமல் போராடி வருகின்றனர்.

ஆர்பாட்டத்தின் 500 மேற்பட்ட லாரி உரிமையாளர்கள் தின் செயல்பாடுகளின்போது சரக்கு மற்றும் ட்ரையலர் வாகனங்களின் முதன்மை வழங்குநர்களாக இருந்த இவர்கள், சரக்கு போக்குவரத்தில் தொடர்ந்து நீடித்து வரும் கடும் வீழ்ச்சியை சீரமைக்க வலியுறுத்தி போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் 500-க்கு மேற்பட்ட லாரி உரிமையாளர்கள், லாரி டிரைவர்கள், உதவியாளர்கள் மற்றும் 100 -க்கு மேற்பட்ட லாரிகள் கலந்து கொண்டனர்.

# ஸ்கைஸ்கேனர் கிரிக்கெட் ஆர்வம் தோற்றியுள்ளது

**சென்னை, ஏப்.23-**

முன்னணி உலகளாவிய பயண செயலியான ஸ்கைஸ்கேனர், இன்று அதன் 'பிட்ச் பெர்ஃபெக்ட் ஜர்னிஸ்' அறிக்கையை வெளியிட்டது.கிரிக்கெட்டின் மீதான காதல் இந்தியர்களின் பயணத் திட்டத்தை எவ்வாறு முடிவு செய்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. கிட்டத்தட்ட பாதி இந்தியர்கள் (47%) உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள கிரிக்கெட் மைதானத்தில் இருக்கைகளில் அமர்ந்து கிரிக்கெட்டை நேரலையில் ரசிக்கத் யாராக இருக்கின்றனர்.விளையாட்டின் மீதான ஆர்வம் முன்னெப்போதையும்விட இப்போது அதிகமாக காணப்படுகிறது. கிரிக்கெட் என்பது ஒரு விளையாட்டு மட்டுமல்ல, அது வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறிவிட்டது என்று ஆய்வில் பங்கேற்றவர்களில் 98 சதவீதம் பேர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இது குறித்து ஸ்கைஸ்கேனர் டிராவல் அண்ட் டெஸ்டினேஷன்ஸ் நிபுணர் மோஹித் ஜோஷி கூறுகையில், இந்தியர்கள் எப்போதுமே பயணம்செய்வதில் அதிக ஆசையும் ஆர்வமும் கொண்டவர்கள்.இப்போது அவர்கள் அதே ஆற்றலை கிரிக்கெட்டின் மீதான ஆர்வத்திலும் காட்டுகிறார்கள். கிட்டத்தட்ட பாதி பேர் (48%) இரண்டு மாதங்களுக்கு முன்பே ஒரு நேரலைப் போட்டியைக் காண தங்கள் பயணங்களைத் திட்டமிடுவதால், கிரிக்கெட் காரணமாக பயணிப்பது அதிகரித்து வருகிறது என்பது தெளிவாகிறது, ரசிகர்கள் தாங்கள் யாருடன் சேர்ந்து கிரிக்கெட் பார்க்க விரும்புகிறார்கள் என்பது வரை ஒவ்வொரு செயலையும் திட்டமிடுகிறார்கள்.

74% இந்தியர்களுக்கு போட்டி நடைபெறும் நாளன்று தங்களுடன் சேர்ந்து போட்டியை ரசிக்க சிறந்த கூட்டாளிகளாக நண்பர்களை விரும்புவதால், இந்த பட்டியலில் நண்பர்கள் முதலிடத்தில் உள்ளனர்.அதைத் தொடர்ந்து குடும்பத்தினர் (59%) மற்றும் மனைவி அல்லது வாழ்க்கைத்துணை/பார்ட்னர் (46%) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பிடிக்கின்றனர் என்று கூறினார்.

## 2026 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிப்பெற்று

# தமிழ்நாட்டில் மீண்டும் எடப்பாடியார் தலைமையில் அம்மா ஆட்சி மலரும்

## மாநில மருத்துவரணி இணைச்செயலாளர் டாக்டர் பா. சரவணன் அறிக்கை

**மதுரை, ஏப் 23-**

2026 சட்டமன்ற தேர்தலில் வெற்றிப்பெற்று தமிழ்நாட்டில் மீண்டும் எடப்பாடியார் தலைமையில் அம்மா ஆட்சி மலரும் என்று அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணைச்செயலாளர் டாக்டர் பா. சரவணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா. சரவணன் நிருபர்களிடம் கூறியதாவது-



கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வை ரத்து செய்வோம். அந்த ரகசியம் எங்களுக்கு தெரியும் என்று மக்களிடத்தில் பொய்யான பிரச்சாரத்தை முதல்வர் ஸ்டாலினும், அவரது மகனும் உதயநிதி ஸ்டாலினும் செய்தார்கள். அதனைத் தொடர்ந்து மக்களை ஏமாற்று வகையில் தீர்மானங்களை போடுவது மட்டுமல்லாது,அதனைத் தொடர்ந்து நீட்டுக்கு எதிராக ஒரு கோடி கையெழுத்து வாங்கி அதை நாங்கள் ரத்து செய்வோம் என்று கூறினார்கள்.ஆனால் அந்த கையெழுத்து எல்லாம் சேலத்தில் திமுக நடத்திய இளைஞரணி மாநாட்டில் குப்பை கூடத்தில் கிடந்தது.அதனை தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலில் நாங்கள் காங்கிரஸ், திமுக கூட்டணி ஆட்சி அமையும் அப்போது நீட் தேர்வை செய்யப்படும் என்று போகாத ஊருக்கு வழி சொல்வது போல மீண்டும் போலியான வாக்குறுதிகளை கொடுத்தனர்.

தற்போது முதல்வர் ஸ்டாலின் திமுக ஆட்சியில் நீட் தேர்வை எதிர்கொள்ளாமல் 22 அப்பாவி மாணவர்கள் பலியாகி உள்ளார்கள்.இதற்கு திமுக கொடுத்த பொய்யான தேர்தல் வாக்குறுதி தான் என மக்களிடத்தில் திமுக மீது கடுமையான கோபம் ஏற்பட்டுள்ளதை திசை திருப்பும் வகையில் மீண்டும் நீட் தேர்வு ரத்து என்ற நாடகத்தை முதல்வர் ஸ்டாலின் அரங்கேற்றி வருகிறார். முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களே? நீங்கள் வரலாற்றை கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். 2009 ஆம் ஆண்டில் காங்கிரஸ் அரசிடம் நீங்கள் கூட்டணி வைத்தீர்கள் அதன் மூலம் மத்திய அமைச்சராக முக அழகிரி, மத்திய இணை அமைச்சர்களாக ஜெகத்ரட்சகன், காந்திசெல்வன், பழனி மாணிக்கம், நெப்போலியன் இருந்தனர் அப்போது திமுகவைச் சேர்ந்த நாடாளுமன்ற 27 பேர் இருந்தனர். திமுகவை மீறி எந்த திட்டமும் காங்கிரஸ் கொண்டு வர முடியாத நிலையில் இருந்தது.

அந்த காங்கிரஸ்,திமுக கூட்டணி ஆட்சியில் போது குலாம் நபி ஆசாத் அமைச்சராகவும் ,இணை அமைச்சராக காந்தி செல்வன் இருந்த போது 21.12.2010 நீட் தேர்வு குறித்து மத்திய அரசின் அரசிதழில் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து நாடாளுமன்றத்தில் மசோதா முன்மொழிந்த போது இதற்கு திமுக உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.அந்த காலகட்டங்களில் உங்களுக்கு துணை முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது. நீங்கள்தான் அனைத்து துறைகளிலும் கையாண்டீர்கள் அப்போது நீட் தேர்வு குறித்து ஏதாவது அறிக்கை வெளியிட்டீர்களா? அல்லது மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்தீர்களா என்பதை ஆதாரத்துடன் நீங்கள் வெளியிட தயாரா?. நீட் தேர்வில் நீங்கள் செய்த துரோகத்திற்கு தான் 2011 சட்டமன்றத் தேர்தலில் மக்கள் உங்களை எதிர்க்கட்சி அந்தஸ்து கூட வழங்கவில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் அதனை தொடர்ந்து பத்து ஆண்டுகள் மக்கள் உங்களை வனவாசம் செய்ய வைத்தார்கள்.

மேலும் அரசு பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ படிப்பு கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் 7.5 சகவீத இட ஓதுக்கீட்டை எடப்பாடியார் கொண்டு வந்தார். இதன் மூலம் இதுவரை 3,500 அரசு பள்ளி மாணவர்கள் பயன்பட்டார்கள். மேலும் அதிமுக ஆட்சி காலத்தில் தான் 23 மேற்பட்ட மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டது, குறிப்பாக ஒரே ஆண்டில் 11 மருத்துவகல்லூரிகளை எடப்பாடியார் கொண்டு வந்தார், இந்திய அளவில் மொத்த மருத்துவர்களில் 8ல் ஒருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்ற வரலாற்றை எம்.ஜி.ஆர்., அம்மா, எடப்பாடியார் ஆகியோர் உருவாக்கி உள்ளார் என்பதை முதல்வர் ஸ்டாலின் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உங்களால் ஒரு மருத்துவ கல்லூரியை கூட இந்த நான்காண்டுகளில் கொண்டு வர முடியவில்லை. முதல்வர் ஸ்டாலின் அவர்களே உங்களுக்கு மனசாட்சி இருந்தால் இதையெல்லாம் நினைவு படுத்தி பாருங்கள் இதன் மூலம் யார் நீட் தேர்வுக்கு திமுக தான் துரோகம் செய்தது என்று தெளிவாக தெரிந்து விடும். தமிழக மக்களுக்கு நீங்கள் செய்த துரோகத்தால் 2011 சட்டமன்றத் தேர்தலில் கிடைத்த தோல்வியைப் போல 2026 சட்டமன்ற தேர்தலில் மக்கள் பாடத்தை புகட்டுவார்கள் மீண்டும் எடப்பாடியார் தலைமையில் அம்மா ஆட்சி மலரும். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாடு மாநில ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப்பில்

# பல பதக்கங்களை வென்ற மதுரை மாவட்ட ஜிம்னாஸ்டிக்ஸ் சங்கத்தின் விளையாட்டு வீரர்கள்



**மதுரை, ஏப்.23-**

தமிழ்நாடு மாநில ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப்பில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி பல பதக்கங்களை வென்ற மதுரை மாவட்ட ஜிம்னாஸ்டிக்ஸ் சங்கத்தின் விளையாட்டு வீரர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மகாராஷ்டிராவின் புனே நகரில் நடைபெறவுள்ள 2025–26 தேசிய ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப்பில் தமிழ்நாட்டை பிரதிநிதி செய்ய, மதுரையைச் சேர்ந்த இரண்டு ஜிம்னாஸ்டிக்ஸ் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.பதக்கம் வென்ற வீரர்களின் சாதனைகளைக் கொண்டாடி, மண்டல முதுநிலை மேலாளர் பி.வேல்முருகன் மற்றும் மாவட்ட விளையாட்டு அதிகாரி டாக்டர் ராஜா ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

மதுரை மாவட்ட ஜிம்னாஸ்டிக்ஸ் சங்க செயலாளர் டி. ராஜூ மற்றும் சங்க மாவட்ட பயிற்சியாளர் பிருத்விராஜ் ஆர். ஆகியோர், வீரர்கள் காட்டிய கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் போற்றத்தக்கது எனக் குறிப்பிடினர். மேலும், வரவிருக்கும் தேசிய போட்டியில் அவர்கள் சிறப்பாக வெற்றிபெற வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

# கோடைகாலத்தில் ஒரு பிஞ்ச் - திருவிழாவையே ஒளிபரப்பவுள்ள வார்னர் பிரதர்ஸ். டிஸ்கவரி சேனல்கள்

**சென்னை, ஏப்.23-**

வார்னர் பிரதர்ஸ். டிஸ்கவரி நிறுவனம் அதன் சேனல்களான போகோ, கார்ட்டூன் நெட்வொர்க் மற்றும் டிஸ்கவரி கிட்ஸ் ஆகியவற்றில் சுமார் 200 அரை மணி நேர புத்தம் புதிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவுள்ளது. பிளாக்பஸ்டர் பிரீமியர்ஸ், சூப்பர் ஹீரோக்கள், பிரபல கிராஸ்ஓவர்கள் மற்றும் அதிரடி நிறைந்த சாகசங்கள் நிறைந்த இந்த கோடைகால சிறப்பு எபிசோடுகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு இளம் ரசிகருக்கு பிடித்த ஏதாவது ஒன்றை நிச்சயம் வழங்கும்.எனவே ஒரு பிளாக்பஸ்டர் சம்மர் சீசனுக்கு தயாராகுங்கள்.குழந்தைகளின் பொழுதுபோக்குக்கான முன்னணி சேனலாக இருக்கும்.

கார்ட்டூன் நெட்வொர்க் அதன் அதிரடி ஆக்ஷன், மற்றும் வயிறு குலுங்கும் காமெடியை மேலும் சிறப்பாகத் தொடரவுள்ளது. டீன் டைட்டன்ஸ் கோ, பந்த்புத் அவுர் புட்பக், க்ரிஸி மற்றும் லெம்மிங்ஸ், மற்றும் மை ஹீரோ அகாடமியா ஆகிய நிகழ்ச்சிகளின் புத்தம் புதிய சீசன்கள் வெளியாகவுள்ளதால் எனர்ஜி நிறைந்த சிறந்த ஆக்ஷன்-காமெடி மற்றும் அனிமி நிகழ்ச்சிகளின் தொகுப்பை நீங்கள் காணலாம். அதேநேரம், கட்டி பட்டி, தோஸ்தி பக்கி மூலம் நட்பையும் மகிழ்ச்சியையும் கொண்டாடுவதை டிஸ்கவரி கிட்ஸ் சேனல் தொடரவுள்ளது. இதில் டிட்டூ-வின் புத்தம் புதிய எபிசோடுகள், காலத்தால் அழியாத பிரபலமான மிஸ்டர் பீன் தி அனிமேட்டட் சீரிஸ், லார்வா மற்றும் ஃபுக்ரே பாய்ஸ் போன்ற நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகவுள்ளன.

## அருப்புக்கோட்டை நகர்
# அ.தி.மு.க. வாட்ஸ் அப்பில் இணையும் நிகழ்ச்சி



**அருப்புக்கோட்டை, ஏப். 23-**

விருதுநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் ஆலோசனையின் பேரில் அருப்புக்கோட்டை நகர செயலாளர் சோலை.சேதுபதி ஏற்பாட்டில் அ.தி.மு.க. தலைமை வாட்ஸ் அப் குரூப்பில் அருப்புக்கோட்டை நகர் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறுபான்மை பிரிவு மாவட்ட செயலாளர் சேரன் முகமது இஸ்மாயில், அம்மா பேரவை நகர தலைவர் சவுண்டையா, நகரப் பொருளாளர் செந்தமிழ் செல்வன், எம்.ஜி.ஆர். மன்ற நகர செயலாளர் செல்வேந்திரன்.

அம்மா பேரவை நகரச் செயலாளர் ராமர், தர்மர், மீனவர் அணி நகர செயலாளர் சிப்ஸ் முருகேசன், இளைஞர் இளம் பெண்கள் பாசறை நகர் செயலாளர் பாலாஜி, சிறுபான்மை பிரிவு மாவட்ட இணைச் செயலாளர் ராஜப்பன், ஒட்டுனர் அணி மாவட்டத் துணைத் தலைவர் சரவணன், வெள்ளைக்கோட்டை கழுசிவலிங்கம், சத்தியராஜன், விளையாட்டு அணி தலைவர் லெனின் வினோத் சிங், மற்றும் வார்டு செயலாளர்கள் அண்டா கலு சிவலிங்கம், ஜெயவேல் பாண்டியன், பால்பாண்டி, முத்துரத்தினம், சின்னச்சாமி, முத்துக்கிருஷ்ணன், தேவராஜ், பாண்டியராஜன், ராம்சுந்தர், செந்தில்குமார், எட்டப்பன், வீரமணி, சித்தநாதன், ஸ்ரீரமேஷ், விஜய் மல்லர், நெல்சன் சுரேஷ் பால், கண்ணன், செந்தில், வெள்ளைச்சாமி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வத்தலக்குண்டுவில்
# தி.மு.க. மாணவரணி உறுப்பினர் சேர்க்கை



**வத்தலக்குண்டு, ஏப். 23-**

திண்டுக்கல் தி.மு.க. மாவட்டமாணவரணி அமைப்பாளர் பிரபாகரன் வழிகாட்டுதலின்படி வத்தலக்குண்டு தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் முருகன் தலைமையில், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் துரைப்பாண்டி முன்னிலையில் இல்லந்தோறும் மாணவரணி உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இதில் வத்தலக்குண்டு ஒன்றியத்துக்கு உட்பட்ட ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் தங்களை தி.மு.க.மாணவரணியில் இணைத்துக் கொள்ள படிவத்தை பூர்த்தி செய்தனர்.

# காவலர்களுக்கு வார விடுமுறை வழங்க வேண்டும் என்ற அரசாணை எந்த வகையில் பின்பற்றபடுகிறது?
## டி.ஜி.பி பதிலளிக்க ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவு

**மதுரை, ஏப். 23-**

மதுரை ஆஸ்டின்பட்டி காவலர் செந்தில் குமார், உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில்,

+தமிழக காவல் துறையில் அதிக பணிச்சுமை இருப்பதாகவும், ஓய்வின்றி பணியாற்ற வேண்டி உள்ளதாகவும் காவலர்கள் தரப்பில் தொடர்ந்து புகார் கூறப்பட்டு வந்தது பல்வேறு பிரச் சினைகளை எதிர்கொள்கின்றனர்.

அவர்களது குறைகளை தீர்க்கும் வகையில் காவலர்கள் முதல் சார்பு ஆய்வாளர்கள் வரை உள்ளவ ர்களுக்கு, வார விடுமுறை வழங்க வேண்டும் என கடந்த 2021 ஆம் ஆண்டு அரசாணை ,பிறப்பிக்கப்பட்டது.

இந்த அரசாணை நடைமுறை படுத்த பட வில்லை. எனவே,காவலர்கள் முதல் சார்பு ஆய்வாளர்கள் வரை உள்ளவ ர்களுக்கு, வார விடுமுறை வழங்க வேண்டும் என கடந்த 2021 ஆம் ஆண்டு பிறப்பித்த அரசாணையை நடைமுறை படுத்த உத்தர விட வேண்டும் என மனுவில் கூறிஉள்ளார்.

இந்த மனு உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதிபதி பட்டு தேவானந்த் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, அரசாணை முறையாக ஏன் . அமல் படுத்த வில்லை?

ஒரு லட்சத்து 20 ஆயிரம் காவலர்கள் உள்ள நிலையில் , வார விடு முறை வழங்கப் பட வில்லை என ஒரு காவலர் மட்டும் மனு தாக்கல் செய்து உள்ளார். அவரை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது.

மற்ற காவலர்கள் மவுனமாக இருப்பது, மேலதிகாரிகளின் மீதான அச்சம் என்ற தகவல் வியப்பாக உள்ளது

எந்த வகையில் ஜனநாயகம்..மனித உரிமை அனைவருக்கும் தான்.

கேரளா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் காவலர்களுக்கு சங்கம் உள்ளது. ஆனால், இங்கு மட்டும் , போலீ சாருக்கு இது வரை சங்கம் இல்லாதது ஏன்,அந்த அரசாணையை ஏன் உயர் அதிகாரிகள் நடைமுறை படுத்தவில்லை.

எனவே, காவலர்களுக்கு வார விடுமுறை வழங்க வேண்டும் என்ற அரசாணையை எந்த வகையில் பின்பற்ற படுகிறது

என தமிழக டிஜிபி பதில் மனு தாக்கல் செய்ய உத்தர விட்டு வழக்கு விசாரணையை ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.

# இல்லம் தோறும் மாணவரணி சேர்க்கை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



**ஒட்டன்சத்திரம், ஏப். 23-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆலோசனையின் பேரில் மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் இல்லம் தோறும் மாணவர் அணி சேர்க்கை குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் மோகன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி,நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், தர்மராஜன், பாலு, பொன்ராஜ், சீனிவாசன்ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநில மாணவரணி துணைச் செயலாளர் ஈரோடு வீரமணி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 2026 சட்டமன்ற தேர்தலில் பணியாற்றும்விதம், இல்லம் தோறும் மாணவரணி உறுப்பினர் சேர்க்கை குறித்து எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், மாவட்டமாணவரணி அமைப்பாளர் தினேஷ் முத்துக்கிருஷ்ணன், துணைஅமைப்பாளர்கள் சுரேஷ்குமார், சரண்யா, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ், உள்ளிட்ட மாணவர்அணி, இளைஞரணி,தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை நெசவாளர் காலனி பகுதிகளில் நகராட்சி சார்பாக தெரு நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசியை நகராட்சி மற்றும் கால்நடை மருத்துவ குழுவினர் செலுத்தும் காட்சி.

## ராமேஸ்வரத்தில்
# ஏ.பி.ஜெ அப்துல்கலாம் படித்த அரசு பள்ளி மாணவி தேசிய திறனறித்தேர்வில் தேர்ச்சி



**ராமேசுவரம், ஏப். 23-**

ராமேஸ்வரத்தில் ஏ.பி.ஜெ அப்துல்கலாம் படித்த மண்டபம் ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப் பள்ளி மாணவி தமிழகம் அளவில் நடைபெற்ற தேசிய திறனறித்தேர்வில் தேர்ச்சி பெற்று மாவட்ட (எலைட்) மாதிரி பள்ளிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் ஆண்டுதோறும் தேசிய வருவாய்வழித் திறனறித்தேர்வில் பங்கேற்று தேர்வு எழுதுகின்றனர். இதில் தேர்வாகும் மாணவர்கள் ஒன்பதாம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை படிப்பதற்கு கல்வி உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ ஆயிரம் என நான்கு ஆண்டுகளுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்படும். மேலும் தேர்ச்சி பெறும் மாணவர்களில் அதிக மதிப்பெண் பெற்றவர்கள் முன்னுரிமைப்படி அரசால் நடத்தப்படும் மாதிரி பள்ளியில் படிப்பதற்கு தேர்வு செய்யப்படுவர். இந்த ஆண்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற தேசிய வருவாய் வழித் திறனறிதல் தேர்வில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்று தேர்வெழுதினர்.

ராமேஸ்வரத்தில் பர்வத வர்த்தினி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மையத்திலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தேர்வு எழுதினார்கள்.இதில் ராமேஸ்வரம் வர்த்தகன் தெருவில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜெ அப்துல்கலாம் படித்த எண். 1 மண்டபம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் 37 பேர் திறனறிதேர்வு எழுதினர். இதில் இப்பள்ளி மாணவி ஹப்பாசிலா (13) அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்றார். இதனால் இவர் ராமநாதபுரத்தில் உள்ள அரசு மாவட்ட மாதிரி பள்ளியில் 9 முதல் 12 வரை படிப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். நான்கு ஆண்டுகளுக்கு இவருக்கு மாதந்தோறும் தலா ரூ 1000 வழங்கப்படும். மேலும் பிளஸ் டூ முடித்ததும் உயர் கல்வி செல்ல அரசு செலவில் நீட் மற்றும் ஜே தேர்வுகளுக்கு சிறப்பு பயிற்சியும் வழங்கப்படும். கடந்த ஆண்டு இப்பள்ளியை சேர்ந்த இரண்டு மாணவிகள் இதே போல் தேர்வாகியது குறிப்பிடத்தக்கது. திறனறித்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவி ஹப்பாசிலா வை பள்ளி தலைமை ஆசிரியை ராஜலட்சுமி மற்றும் சக ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் நாகராஜன் உள்பட மாணவர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

# முதுகுளத்தூர் தாலுகா அலுவலகம் முன்பு ரேசன் கடை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



**முதுகுளத்தூர், ஏப். 23-**

முதுகுளத்தூர் தாலுகா அலுவலகம் முன்பு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமிழகம் முழுவதும் நியாய விலை கடை பணியாளர்கள் மாநிலம் தழுவிய கடையடைப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகா முன்பு தமிழ் நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர் ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் விபி தினகரன் தலைமை தாங்கினர்.

மாநில செயலாளர் எஸ் .மாரிமுத்து ஆர்ப்பாட்டத்தில் சிறப்புரை நிகழ்த்தினர். முதுகுளத்தூர் வட்டார தலைவர் எஸ் .ஜோதி முருகன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார் மாவட்ட செயலாளர் பி ஞானசேகரன் மாவட்ட துணை தலைவர் பழனீ ஈஸ்வரன் மாவட்ட பொருளாளர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுவிநியோகத்திற்கான தனித்துறை விரல் ரேகை பதிவு இணையதள சேவையை மேம்படுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றன வட்டச் செயலாளர் அமரநாதன் ஆர்ப்பாட்ட முடிவில் நன்றி கூறினார்

# திருமங்கலத்தில் வங்கி முன் இருக்கும் அகழியால் வாடிக்கையாளர்கள் அவதி



**திருமங்கலம், ஏப். 23-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் உசிலம்பட்டி சாலையிலுள்ள கனரா வங்கியின் முன்பு குடிநீர் குழாய் பதிப்பதற்காக தோண்டப்பட்ட பள்ளம் கடந்த ஒருவார காலத்திற்கும் மேலாக மூடப்படாமல் அகழி போல் திறந்து கிடப்பதால் வாடிக்கையாளர்கள் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

திருமங்கலம் நகர் உசிலம்பட்டி சாலையில் கிராமப்புற மக்கள் அதிகளவில் பயன்படுத்திடும் கனரா வங்கி செயல்பட்டு வருகிறது.இங்கு நாள் தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் தங்களது பல்வேறு பண பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்காக வந்து செல்வது வழக்கம். இந்நிலையில் திருமங்கலம் நகர் முழுவதிலும் புதிய குடிநீர் குழாய்கள் பதித்து வரும் பணிகளின் ஒருபகுதியாக கடந்த ஒருவாரத்திற்கு முன்பு உசிலம்பட்டி சாலையிலுள்ள கனரா வங்கியின் முன்பாக சுமார் ஐந்தரை அடி ஆழத்தில் குடிநீர் குழாய் பதித்திடும் பணிகளுக்காக பள்ளம் தோண்டப்பட்டது. அதற்கு பாதுகாப்பாக பேரிகார்டுகளும் வைக்கப்பட்டது.

இதனால் வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்கள் தட்டுத்தடுமாறி வங்கிக்கு சென்று வந்தனர்.இந்நிலையில் குடிநீர் குழாய் பதிப்பதற்காக தோண்டப்பட்ட பள்ளம் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதும்,வங்கிக்கு முன்பு ஆழமான அகழி போல் காட்சியளிப்பதும், அதில் வாடிக்கையாளர்கள் சிலர் தவறி விழுவதும்,சிலர் நிலை தடுமாறிச் செல்வதும் அன்றாட நிகழ்வாகி விட்டது.வங்கி நிர்வாகமும் இதனை கண்டு கொள்ளாமல் விட்டுவிட்ட நிலையில் நேற்று மதியம் வங்கிக்கு வந்த வயதான வாடிக்கையாளர் ஒருவர் இந்த பள்ளத்தில் தவறி விழுந்து பொதுமக்களால் மீட்கப்பட்ட நிகழ்வு அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. எனவே வங்கிக்கு பாதுகாப்பு அகழி போன்று கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக குடிநீர் குழாய் பதிப்பிற்காக மூடப்படாமல் இருக்கும் இந்த பள்ளத்தை விரைவில் சீரமைத்து மூடிட திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வங்கி வாடிக்கையாளர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கவனமீர்க்கும் ஹெச்.சி.எல் ஜிக்ஸா ஆறாவது பதிப்பு அறிவிப்பு

**சென்னை, ஏப். 23-**

பள்ளி மாணவர்களுக்கு இந்தியாவின் மிகப்பெரிய சிக்கல்-தீர்த்தல் மதிப்பீட்டு பிளாட்ஃபார்மான ஹெச்.சி.எல் ஜிக்ஸா ஆறாவது பதிப்பை 13.8 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பீட்டில் உலகளாவிய கூட்டு நிறுவனமான ஹெச்.சி.எல் குரூப் அறிவித்துள்ளது. புதுமை மற்றும் பகுப்பாய்வுத் திறன்களைப் பேணிவளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள ஹெச்.சி.எல் ஜிக்ஸா, படைப்புத்திறன் மற்றும் தர்க்கரீதியான சிந்தனை வழியாக யதார்த்த-உலகின் சவால்களைச் சமாளிக்க இளைஞர்களின் மனதிற்குத் திறனளிப்பதை தொடர்ந்து செயல்படுத்திவருகிறது.

ஹெச்.சி.எல் குரூப், இணை துணைத் தலைவர் மற்றும் பிராண்ட் தலைவரான ரஜத் சந்தோலியா இந்த முன்னெடுப்புக் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், “ஓர் இயக்க காற்றல் மிகுந்த உலகில் மிளிர்வதற்கு இளைஞர்களின் மனங்களில் திறமைகளைப் புகுத்துவதன் மூலம் அவர்களுடைய திறனை வெளிக்கொண்டுவருவதை நம் நோக்கமாகக் கொண்டிருக்கிறோம்.” என்றார்.

சுற்று 1 – இண்ட்ராஸ்கூல் சுற்று: பகுத்தறிதல், சிக்கல்-தீர்த்தல் மற்றும் புரிந்துகொள்ளுதலை சோதிக்கும் ஆன்லைன் (எம்.சி.க்யூ-அடிப்படையிலானது) சோதனையில் பங்கேற்க வேண்டும். சுற்று 2 – இண்டர்ஸ்கூல் சுற்று: சுற்று 1 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் ஆன்லைன் இண்டர்-ஸ்கூல் நேருக்கு-நேராக எதிர்கொள்வதில் தங்களுடைய பள்ளிகளின் சார்பாகக் கலந்துகொள்வார்கள். இந்தச் சுற்றில் கூட்டு முயற்சி மற்றும் கருத்தாக்கத்தைப் பயன்படுத்துதல் முக்கியமானதாக விளங்கும் அணி-அடிப்படையிலான சவால்களை அடங்கியிருக்கும். 3-4 மாணவர்கள் அடங்கிய அணிகள் ஒன்றாகச் சேர்ந்து யதார்த்த-உலகின் சவால்களைத் தீர்ப்பார்கள். அதையடுத்து முதல் 20 அணிகள் தீர்ப்பாயக் குழு விற்கு-முந்தைய சுற்றுக்குச் செல்வார்கள்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அரசு உயர்நிலைப்பள்ளி, மூக்கண்டப்பள்ளி ஒரு முன்மாதிரியான வளாகமாக மாறுகிறது

**ஓசூர், ஏப்.23-**

ஓசூர் கடப்பா கல்யாண மண்டபம் அருகே மோதம் சாலையில் அமைந்துள்ள மூக்கண்டப்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த பெரிய மாற்றம் வாட்டெக் கார்ப்பரேஷனின் ஆதரவின் மூலம் சாத்தியமானது. இன்றிபுவனம் என்னேபிள் சமூக கண்டுபிடிப்பு அறக்கட்டளையுடன் வைத்துள்ள சிஎஸ்ஆர் பார்ட்னர்ஷிப் மூலம் இந்த பள்ளிக்கூடத்தின் வளாகம் புத்துயிர் பெற்றுள்ளது. இதற்கு முன்பு இந்த பள்ளிக்கூடத்தின் சுவர்கள் இடிந்தும் கழிப்பறைகள் சரிவர செயல்படாமலும் இருந்தன இப்போது பாதுகாப்பான, அருமையான மற்றும் வருங்காலத்தில் கல்வி கற்க ஏற்ற இடமாக மாற்றப்பட்டுள்ளது.ஆக இந்த பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற 678 மாணாக்கர்களுக்கு ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாங்கள் ஏற்கனவே வழக்கமாக வரும் மாணாக்கர்களின் எண்ணிக்கையில் 20% அதிகரித்துள்ளதைக் காண்கிறோம் என்று பள்ளியின் ஆசிரியரான ராஜலட்சுமி கூறுகிறார். பள்ளிக் குழந்தைகள் பள்ளி தொடங்குவதற்கு முன்பாகவே வருகிறார்கள். நீண்ட நேரம் பள்ளிக்கூடத்தில் இருக்கிறார்கள். தங்கள் பள்ளி வளாகத்தைக் குறித்து பெருமிதம் கொள்கிறார்கள். இந்த மாற்றங்கள் காரணமாக, வரும் கல்வியாண்டில் பள்ளியில் மாணாக்கர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.இந்த மாற்றங்கள் பள்ளிக்கூடத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளதை பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல், மன உறுதி, கல்வி கற்பதில் ஆர்வம் மற்றும் மாணவர்களிடையே தங்களுடைய பள்ளி என எண்ணும் வலுவான உணர்வு ஆகியவற்றையும் பிரதிபலிக்கின்றன.

# ரூ.7,500 கோடி நிதித் திரட்டலுக்கு அனுமதி அளித்துள்ள ஐ.டி.எஃப்.சி ஃபர்ஸ்ட் பேங்க் இயக்குநர் அவை

**கோவை, ஏப்.23-**

ஐ.டி.எஃப்.சி ஃபர்ஸ்ட் பேங்கின் இயக்குநர் அவை இன்று நடத்தியுள்ள கூட்டத்தில், உலகளாவிய வளர்ச்சி முதலீட்டாளர் நிறுவனமாகிய வார்பர்க் பின்கஸ் எல்.எல்.சி இன் இணை நிறுவனமான க்யூரண்ட் ஸீ இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி.விக்குத் தோராயமாக ₹4,876 கோடி மற்றும் தன்னுடைய தனியார் பங்காதாயங்கள் துறையால் நிர்வகிக்கப்படும் அபு தாபி முதலீட்டு வாரியத்தின் (ஏ.டி.ஐ.ஏ) முழு உரிமையுள்ள துணை நிறுவனமான பிளாட்டினம் இன்விக்டஸ் பி 2025 ஆர்.எஸ்.சி லிமிடெட்டிற்குத் தோராயமாக ₹2,624 கோடிக்கான பங்கு மூலதன முன்னுரிமை வெளியீட்டிற்கு (சி.சி.பி.எஸ்) அனுமதி அளித்துள்ளது. இந்த முன்மொழியப்பட்டுள்ள வழங்கல்கள் பங்குதாரர் மற்றும் நெறிமுறை அமைப்பின் அனுமதிகளைப் பொறுத்ததாகும்.

இந்தக் காலகட்டத்தில், டெபாசிட்டுகள் 6 மடங்கு அதிரித்துள்ளன, கடன்கள் மற்றும் முன்பணங்கள் இரட்டிப்பாகியுள்ளன என்பதுடன் சி.எஸ்.ஏ விகிதம் 8.7% என்பதிலிருந்து 47.7% என குறிப்பிடும்படியான அளவில் மேம்பட்டுள்ளது. 2019 நிதியாண்டில் ₹1,944 கோடி இழப்பு என்பதிலிருந்து 2024 நிதியாண்டில் ₹2,957 கோடி லாபம் என்பது வரை பி.ஏ.டி உயர்ந்துள்ளது. இருப்பினும், 2025 நிதியாண்டில் இந்த நிறுவனம் நன்றாகவே செயல்பட்டு வந்த நுண்கடனில் துறை அளவிலான சவால்கள் காரணமாக 2025 நிதியாண்டில் லாபமானது 9 மில்லியனாக குறைந்தது. இந்த நிதித் திரட்டலின் மூலம், ஒட்டுமொத்த மூலதன நிறைவு 16.1% என்பதிலிருந்து 18.9% என அதிகரித்து (~16.5% இல் சி.இ.டி-1 விகிதம், டிசம்பர் 31, 2024 வரை வங்கியின் மூலதன நிலை அடிப்படையில் கணக்கிடப்பட்டது), வங்கியின் இருப்பு நிலையை வலுப்படுத்தும் என்பதுடன் அதனை வலுவான மற்றும் சுய-நீட்டிப்புத்திறன் கொண்ட லாபகரமான வளர்ச்சி என்ற நிலையில் வைக்கும்.

வி.வைத்யநாதன், மேலாண் இயக்குநர் மற்றும் சி.இ.ஓ, ஐ.டி.எஃப்.சி ஃபர்ஸ்ட் பேங்க்: “முதல் நாளில் இருந்தே, இந்த வங்கியை இந்தியாவில் உள்ள உலகத் தரம் வாய்ந்த வங்கியாக உருவாக்கும் நீண்டகால தொலைநோக்குடனே நாங்கள் எங்களுடைய அடிக்கட்டுமானத்தை உருவாக்கினோம். வாடிக்கையாளர்களிடம் பரிவுணர்வு என்ற கலாச்சாரத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம் என்பதுடன் உயர்ந்த அளவிலான வாடிக்கையாளர் சேவையை வழங்க பெருமுயற்சி மேற்கொள்கிறோம்.” என்றார்.

# செந்துறை பகுதியில் இன்று மின்தடை

**நத்தம், ஏப். 23-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறை துணை மின் நிலையத்தில் இன்று (23-4-2025) புதன்கிழமை மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறவுள்ளது.

இதையொட்டி இன்று காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை செந்துறை, மாதவநாயக்கன்பட்டி, மாமரத்துப்பட்டி, களத்துப்பட்டி, கருத்தநாயக்கன்பட்டி, மணக்காட்டுர், மங்களப்பட்டி, குடகிப்பட்டி, கோசுகுறிச்சி, பிள்ளையார்நத்தம் கோட்டைப்பட்டி, ஆகிய ஊர்களில் மின்சாரம் இருக்காது என நத்தம் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் புண்ணியராகவன் தகவல் தெரிவித்துள்ளார்.

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)**
**அ.தி.மு.எண்: 2127/2025/அ.3**

K.தனபாலன், S/o கண்ணன்,
கோட்டப்பட்டி,
கச்சிராயன்பட்டி கிராமம்,
மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்.
...... மனுதாரர்

//எதிரிடை //

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மேலூர் வட்டம்
....... எதிர்மனுதாரர்

மனுதார் K.தனபாலன் என்பவரின் தாத்தா வெ.முத்து 04.02.1992-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கச்சிராயன்பட்டி கிராமம், கோட்டப்பட்டி கிராமவீட்டில் இறந்ததை அவரது இறப்பை கச்சிராயன்பட்டி கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

K.தனபாலன்
மனுதாரர்

**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் சிவகங்கை**
**ந.க.எண்.117/2025**
**அறிவிப்பு**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், ஆண்டிச்சியூரணி கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் சூசைராஜ் என்பவரின் தாயார் செபஸ்தியம்மாள் க/பெ.அருளாந்து என்பவர் கடந்த 09.03.2001-ந்தை முகவரியில் இறந்து விட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சூசைராஜ்
மனுதார்

Printed Published and Owned by S.Manimaran, Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018. Phone: 0452- 2668165, 0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## ஐ.பி.எல். தொடரில் திடீர் சர்ச்சை:
# மேட்ச் பிக்சிங்கில் ஈடுபட்டதா ராஜஸ்தான் ராயல்ஸ் அணி..?

**ஜெய்ப்பூர், ஏப். 23-**

ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 'மேட்ச் பிக்சிங்'-ல் ஈடுபட்டதாக சர்ச்சை எழுந்துள்ளது.



**லக்னோ வெற்றி...**

ஐ.பி.எல். தொடரின் 18-வது சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் கடந்த 19-ம் தேதி ஜெய்ப்பூரில் நடைபெற்ற 36-வது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இதில் 2 ரன் வித்தியாசத்தில் லக்னோ திரில் வெற்றி பெற்றது.

**2 ரன் வித்தியாசத்தில்...**

இந்த ஆட்டத்தில் லக்னோ நிர்ணயித்த 181 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய ராஜஸ்தான் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 9 ரன்கள் தேவைப்பட்ட நிலையில் கைவசம் 6 விக்கெட்டுகள் இருந்தது. பரபரப்பான அந்த ஓவரை வீசிய லக்னோ வேகப்பந்து வீச்சாளர் ஆவேஷ் கான் ஒரு விக்கெட் வீழ்த்தியதுடன் 6 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து தங்கள் அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

**மேட்ச் பிக்சிங்...**

இந்நிலையில் இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 'மேட்ச் பிக்சிங்' சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத்தின் தற்காலிக குழு ஒருங்கிணைப்பாளர் ஜெய்தீப் பிஹானி சர்ச்சையை கிளப்பியுள்ளார். ஏனெனில் கடைசி ஓவரில் 9 ரன்கள் மட்டுமே தேவைப்பட்ட பிறகு சொந்த மண்ணில் ராஜஸ்தான் ராயல்ஸ் எப்படி தோற்றது? என்று கேள்வி எழுப்பியுள்ளார். எனவே, இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். இருப்பினும் இதற்கான ஆதாரங்கள் எதுவும் அவர் தரப்பில் சமர்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**2 வருடங்கள் தடை....**

முன்னதாக கடந்த காலங்களில் ராஜஸ்தான் ராயல்ஸ் வீரர்கள் சூதாட்ட புகாரில் சிக்கி தண்டனையை அனுபவித்தனர். அத்துடன் ராஜஸ்தான் ராயல்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் சூதாட்ட புகாரில் சிக்கியதால் 2 வருடங்கள் (2016-2017) ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

## 8 போட்டியில் 5 அரை சதம்:
# சாய் சுதர்சனுக்கு ஆரஞ்சு தொப்பி

**கொல்கத்தா, ஏப்.23-**

8 போட்டியில் 5 அரை சதம் அடித்தன் மூலம் ஆரஞ்சு தொப்பியை சாய் சுதர்சன் கைப்பற்றியுள்ளார்.

5-வது அரை சதம்...

ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டத்தில் கொல்கத்தா- குஜராத் அணிகள் மோதின. இதில் முதலில் விளையாடிய குஜராத் அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 198 ரன்கள் எடுத்தது. இந்த போட்டியில் குஜராத் அணியில் இடம் பிடித்த தமிழக வீரர் சாய் சுதர்சன் 5-வது முறையாக அரை சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம் 8 இன்னிங்ஸில் 5 அரை சதம் அடித்துள்ளார்.

**கடும் போட்டி...**

நடப்பு தொடரில் சாய் சுதர்சன் 8 போட்டிகளில் விளையாடி மொத்தமாக 417 ரன்கள் அடித்திருக்கிறார். இதன் மூலம் சாய் சுதர்சனுக்கு ஆரஞ்சு நிற தொப்பி கிடைத்திருக்கிறது. லக்னோ அணி வீரர் நிக்கோலஸ் பூரன் 368 ரன்கள் எடுத்திருந்த நிலையில், சாய் சுதர்சனிடம் கடந்த போட்டியில் இருந்து ஆரஞ்சு நிற தொப்பியை வாங்கி இருந்தார். தற்போது சாய் சுதர்சன் மீண்டும் ஒரு அரை சதம் அடித்து நிக்கோலஸ் பூரனிடம் இருந்து ஆரஞ்சு நிற தொப்பியை தன்வசம் படுத்தியுள்ளார். தற்போது இருவருக்கும் இடையே 49 ரன்கள் வித்தியாசம் இருக்கின்றது.

# 40-வது ஐ.பி.எல். லீக் ஆட்டம்: குஜராத் டைட்டன்ஸ் வெற்றி

**கொல்கத்தா, ஏப்.23-**

கொல்கத்தா அணிக்கு எதிரான ஐ.பி.எல். லீக் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் அணி 39 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



**குஜராத் பேட்டிங்...**

ஐ.பி.எல். தொடரின் லீக் ஆட்டத்தில் கொல்கத்தா - குஜராத் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற கொல்கத்தா பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் விளையாடிய குஜராத் அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 198 ரன்கள் எடுத்தது. கொல்கத்தா அணி தரப்பில் வைபவ், ஹர்சித் ராணா, ரசல் ஆகியோர் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

**199 ரன்கள் இலக்கு...**

இதையடுத்து 199 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது. ஆனால் அந்த அணியில் ரஹானேவை தவிர வேறு யாரும் சரியாக பேட்டிங் செய்யவில்லை. ரஹானே மட்டுமே அதிகபட்சமாக 50 ரன்கள் எடுத்திருந்தார். குர்பாஸ் 1 ரன்களும், நரைன் 17 ரன்களும், வெங்கடேஷ் 14 ரன்களும், சிங் 1 ரன்களும் என வரிசையாக ஆட்டமிழந்தனர்.

**குஜராத் அபார வெற்றி...**

இறுதியில் கொல்கத்தா அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 159 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் குஜராத் அணி 39 ரன்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வீழ்த்தியது.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | குஜராத் | 8 | 6 | 2 | 12 | +1.104 |
| 2 | டெல்லி | 7 | 5 | 2 | 10 | +0.589 |
| 3 | பெங்களூரு | 8 | 5 | 3 | 10 | +0.472 |
| 4 | பஞ்சாப் | 8 | 5 | 3 | 10 | +0.177 |
| 5 | லக்னோ | 8 | 5 | 3 | 10 | +0.088 |
| 6 | மும்பை | 8 | 4 | 4 | 8 | +0.483 |
| 7 | கொல்கத்தா | 8 | 3 | 5 | 6 | +0.212 |
| 8 | ராஜஸ்தான் | 8 | 2 | 6 | 4 | -0.633 |
| 9 | ஐதராபாத் | 7 | 2 | 5 | 4 | -1.217 |
| 10 | சென்னை | 8 | 2 | 6 | 4 | -1.392 |

## இன்றைய ஐ.பி.எல் (41-வது லீக்)



அணிகள் - ஐதராபாத் vs மும்பை

இடம் - ஐதராபாத் மணி - இரவு 7.30

# போப் பிரான்சிஸ் மறைவுக்கு 3 நாட்கள் அரசு துக்கம் அனுசரிப்பு: மத்திய அரசு

**புதுடெல்லி, ஏப். 23-**

போப் பிரான்சிஸின் மறைவுக்கு மரியாதை செலுத்தும் விதமாக 3 நாட்கள் அரசு துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 1,300 ஆண்டுகளில் ஐரோப்பியரல்லாத முதல் போப்பாக இருந்த பிரான்சிஸ், நேற்று முன்தினம் (திங்கள்கிழமை) காலமானார். அவருக்கு வயது 88. அவரது மறைவுக்கு பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர்.

இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மரியாதைக்குரிய போப் பிரான்சிஸ், ஏப்ரல் 21 அன்று காலமானார். அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக இந்தியா முழுவதும் மூன்று நாள் அரசு துக்கம் அனுசரிக்கப்படும்.

ஏப்ரல் 22 (செவ்வாய்) மற்றும் ஏப்ரல் 23 (புதன்கிழமை) ஆகிய தேதிகளில் இரண்டு நாட்கள் அரசு துக்கம் அனுசரிக்கப்படும். மேலும், இறுதிச் சடங்கு நடைபெறும் நாளில் ஒரு நாள் அரசு துக்கம் அனுசரிக்கப்படும். அரசு துக்கக் காலத்தில், இந்தியா முழுவதும் தேசியக் கொடி வழக்கமாக பறக்கவிடப்படும் அனைத்து கட்டிடங்களிலும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும். மேலும், அதிகாரப்பூர்வ பொழுதுபோக்கு எதுவும் இருக்காது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டி.என்.பி.எஸ்.டி. குரூப் 1 தேர்வு: இறுதி தரவரிசை பட்டியல் வெளியீடு

**சென்னை, ஏப். 23-**

குரூப் 1 தேர்வு முடிவுகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயம் வெளியிட்டுள்ளது.

துணை ஆட்சியர், காவல் துணைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட முக்கியப் பணியிடங்கள் குரூப் 1 பிரிவின் கீழ் வருகின்றன. அந்த வகையில், 2024- ஆம் ஆண்டுக்கான குரூப் 1 தேர்வு அறிவிக்கை கடந்தாண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.

துணை ஆட்சியர் 16, காவல் துணைக் கண்காணிப்பாளர் 23, வணிகவரி உதவி ஆணையர் 14, கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் 21, ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் 14, மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி, மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி அதிகாரி பணியிடங்கள் தலா 1 ஆகிய 90 காலிப் பணியிடங்களுக்கு முதல்நிலைத் தேர்வு கடந்த ஜூலை 13-இல் நடைபெற்றது. இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றோருக்கு கடந்த டிச. 10 முதல் டிச. 13-ஆம் தேதி வரை முதன்மைத் தேர்வு நடைபெற்றது. முதன்மைத் தேர்வில் தேர்வானவர்களுக்கு கடந்த ஏப். 7 ஆம் தேதி முதல் ஏப். 9 ஆம் வரை நேர்காணல் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து சான்றிதழ் சரிபார்ப்பும் நடந்தது. இந்த நிலையில், குரூப் 1 தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு, இறுதி தரவரிசைப் பட்டியல் வெளியாகியுள்ளது.

## கான்வேயின் தந்தை காலமானார்

சென்னை சூப்பர் கிங்ஸ் (சி.எஸ்.கே.) அணி வீரர் டெவான் கான்வேயின் தந்தை உயிரிழந்தார். இந்த தகவலை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் வெளியிட்டுள்ளது. நியூஸிலாந்து நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் டெவான் கான்வே ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இடம்பிடித்துள்ளார். சென்னை அணியின் நட்சத்திர பேட்ஸ்மேனாகவும் இருப்பவர்.

இந்தநிலையில், அவரது தந்தை டெண்டான் மறைவைத் தொடர்ந்து அவர் நியூஸிலாந்துக்கு திரும்பியிருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த கான்வேயின் குடும்பத்தார் நியூஸிலாந்துக்கு குடி பெயர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. டெவான் கான்வேயின் தந்தை மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் பொருட்டு, சென்னை சூப்பர் கிங்ஸ்(சி.எஸ்.கே.) அணி வீரர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கறுப்பு நிற ரிப்பன் அணிந்திருந்தனர்.

## இந்திய அணி ஆஸி. பயணம்

இந்திய மகளிர் ஹாக்கி அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. அதன்படி ஆஸ்திரேலியா 'ஏ' அணிக்கெதிராக 2 போட்டிகளிலும், ஆஸ்திரேலிய அணிக்கெதிராக 3 போட்டிகளிலும் இந்தியா விளையாட உள்ளது. இந்த தொடர் வருகிற 26-ம் தேதி தொடங்க உள்ளது.

இந்நிலையில் இந்த தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி ஆஸ்திரேலியா புறப்பட்டு சென்றது. ஏப்ரல் 26, 27 மற்றும் மே 1-ம் தேதிகளில் ஆஸ்திரேலியா ஏ அணியையும், மே 3, 5-ம் தேதிகளில் ஆஸ்திரேலியா அணியையும் இந்தியா எதிர்கொள்கிறது. அனைத்து போட்டிகளும் பெர்த் மைதானத்தில் நடைபெற உள்ளன.

## பாகிஸ்தான் வீரருக்கு அழைப்பு

ஒலிம்பிக்கில் 2 பதக்கங்கள் (தங்கம் மற்றும் வெள்ளி) வென்று சாதனை படைத்த இந்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு பெருமை சேர்க்கும் வகையில், 'நீரஜ் சோப்ரா கிளாசிக் ஈட்டி எறிதல் போட்டி' இந்தியாவில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த போட்டி பெங்களூருவில் உள்ள கண்டீவாரா ஸ்டேடியத்தில் நடைபெற உள்ளது. இந்த ஈட்டி எறிதல் போட்டியில் 2 முறை உலக சாம்பியன் ஆண்டர்சன் பீட்டர்ஸ் (கிரனடா), 2016-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற தாமஸ் ரோஹ்லர் (ஜெர்மனி), 2016-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற ஜூலியஸ் யெகோ (கென்யா), கர்டிஸ் தாம்சன் (அமெரிக்கா) உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கிறார்கள்.

இந்நிலையில் இந்த தொடரில் பங்கேற்க 2024-ம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற பாகிஸ்தான் ஈட்டி எறிதல் வீரர் அர்ஷத் நதீமுக்கு நீரஜ் சோப்ரா அழைப்பு விடுத்துள்ளார். இருப்பினும் நதீம் பங்கேற்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 2010 போல இந்த ஆண்டும் மீண்டு வருவோம்: சி.எஸ்.கே. அணி தலைமை நிர்வாகி நம்பிக்கை

**சென்னை, ஏப்.23-**

2010 போல இந்த ஆண்டும் மீண்டு வருவோம் என சி.எஸ்.கே. சி.இ.ஓ. காசி விஸ்வநாதன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**கடைசி இடத்தில்..**

ஐ.பி.எல். தொடரின் 18-வது சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் 5 முறை சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நடப்பு சீசனில் இதுவரை 8 லீக் போட்டிகளில் ஆடி 6 தோல்வி, 2 வெற்றி கண்டு புள்ளி பட்டியலில் கடைசி இடத்தில் பரிதவிக்கிறது.

**நம்பிக்கை..**

இந்நிலையில் தொடர் தோல்விகளை சந்தித்து வரும் சென்னை சூப்பர் கிங்ஸ் 2010-ம் ஆண்டு போல மீண்டெழுந்து இந்த சீசனிலும் கோப்பையை கைப்பற்றும் என்று அந்த அணியின் சி.இ.ஓ. காசி விஸ்வநாதன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "இந்த தொடரில் சி.எஸ்.கே. இதுவரை சரியாக விளையாடவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறோம். இதனால் நீங்கள் அதிருப்தியில் இருக்கலாம்.

**மீண்டு வருவோம்..**

இனி வரும் போட்டிகளில் சிறப்பாக விளையாட முயற்சிப்போம். 2010-ம் ஆண்டு 5 போட்டிகளில் தொடர்ந்து தோல்வி அடைந்திருந்தாலும் அடுத்தடுத்த போட்டிகளை வென்று கோப்பையை வென்று அசத்தியது சென்னை அணி. அதே போன்று இந்த ஆண்டும் மீண்டு வந்து கோப்பையை வெல்லும் என்கிற நம்பிக்கை எனக்கு உள்ளது. வரும் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதில் நம்முடைய வீரர்கள் உறுதியாக உள்ளனர்" என்று கூறினார்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 70 சதவீதம் மின் கட்டணம் உயர்வு

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

**சென்னை, ஏப். 23-**

கடந்த 4 ஆண்டுகளில் 70 சதவீதம் அளவுக்கு மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

மதுவிலக்கு மற்றும் மின்சாரத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது, அமலாக்கத்துறை டாஸ்மாக் நிறுவனங்களில் நடத்திய சோதனை குறித்து விவாதிக்க எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வாய்ப்பு கேட்டார். இதற்கு பேரவைத் தலைவர் அப்பாவு அனுமதி மறுத்ததைக் கண்டித்து, அதி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.

தொடர்ந்து சட்டப்பேரவை வளாகத்தில் எடப்பாடி கே பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:- டாஸ்மாக் நிறுவனம் மற்றும் மது ஆலைகளுக்கு சொந்தமான நிறுவனங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியதில் ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடைபெற்று இருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியானது. இது தொடர்பாக விவாதிக்க வாய்ப்பு கேட்டோம். மதுவிலக்கு துறை மானிய கோரிக்கை விவாதத்தில் இது குறித்து பேசினால் தான் உரிய பதில் கிடைக்கும் என்று, பேரவையில் பேச முயன்றோம், ஆனால் இந்தப் பிரச்னை குறித்து பேசுவதற்கு பேரவைத் தலைவர் முழுமையாக அனுமதியை வழங்க மறுத்து விட்டார்.

கோடைகாலம் தொடங்கியுள்ள நிலையில் அண்மைக் காலமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மின் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் பல்வேறு பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர். அவ்வப்போது ஏற்படும் மின்வெட்டு பிரச்னையால், தமிழ்நாடு குடிநீர் வாரிய மின் மோட்டார்கள் முறையாக செயல்படாததால், சென்னை மாநகர் உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்க சிரமமாக இருப்பதால் பல்வேறு இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் கிடைக்காததால் விளை நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் தவிக்கின்றனர், இதனால் விவசாய தொழிலாளர்களுக்கும் முறையாக வேலை வாய்ப்புகள் கிடைப்பதில்லை. தி.மு.க. ஆட்சிக்கு வந்த கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவரை 70 சதவீதம் அளவுக்கு மின் கட்டணம் உயர்த்தப்பட்டு இருப்பதால், பல்வேறு தொழில் நிறுவனங்கள் பக்கத்து மாநிலங்களுக்கு சென்று தொழில் தொடங்க சென்று விட்டனர் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் மாதம் ஒரு முறை மின்கட்டணம் கணக்கெடுக்கும் பணி நடத்தப்படும் என்ற வாக்குறுதி அளித்து, நான்கு ஆண்டுகள் ஆகியும் இதுவரை நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறது" என்றார்.

# செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.1,000 கோடியில் பாதாள சாக்கடை பணிகள்

## அமைச்சர் கே.என்.நேரு தகவல்

**சென்னை, ஏப். 23-**

செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.1,000 கோடியில் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் பேசிய செங்கல்பட்டு எம்.எல்.ஏ. வரலட்சுமி, மறைமலைநகர் நின்னக்கரை ஏரியில் கழிவுநீர் விடுவிப்பதைத் தடுக்க அரசு ஆவண செய்யுமா என்று கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்து பேசிய நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, "மறைமலை நகர் பகுதிகளில் 33 நீர் நிலைகள் உள்ளது. இந்தப் பகுதிகளில் தற்போது, 2.20 எம்எல்டி கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் உள்ளது. மேலும், 37 கோடி செலவில் 15.92 எம்.எல்.டி கழிவு நீரை சுத்திகரிக்கும் வகையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க டெண்டர் கோரப்பட்டு தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய செங்கல்பட்டு எம்.எல்.ஏ. வரலட்சுமி, மறைமலைநகர் நின்னக்கரை ஏரியை தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் கே.என்.நேரு பட்டியலிட்டு கூறியதாவது:-

சென்னை மாநகர் பகுதி தவிர்த்து சென்னை புறநகர் பகுதிகளில் 3,898 நீர் நிலைகள் உள்ளது. இதில் தாம்பரம் பகுதிகளில் 211 கோடி செலவில் தற்போது பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் விடுபட்ட பகுதிகளில் 780 கோடி செலவில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதைத் தவிர்த்து செங்கல்பட்டு பகுதியில், 76.26 கோடி, மதுராந்தகம் பகுதியில் 9.50 கோடி, மறைமலைநகர் பகுதிகளில் 300.57 கோடியில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் எல்லாம் முடிந்த பிறகு சுத்திகரிக்கப்பட்ட நீர் மட்டுமே நீர் நிலைகளுக்கு செல்லும். எனவே நீர் நிலைகள் மாசுபடுவது தடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தென்காசி தோரணமலை கிரிவல பாதை அமைக்கப்படுமா?

## சட்டசபையில் அமைச்சர் சேகர்பாபு பதில்

**சென்னை, ஏப். 23-**

தென்காசி தோரணமலை கிரிவல பாதை அமைக்கப்படுமா என்ற கேள்விக்கு அமைச்சர் சேகர்பாபு பதில் அளித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரம் நடைபெற்று வருகிறது. இதில், உறுப்பினர்களில் கேள்விகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர். அந்த வகையில், தென்காசி மாவட்டம் கடையம் அருகே தோரணமலை முருகன் கோவிலில், மலையை சுற்றி கிரிவல பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? தென்காசி ஆலங்குளம் தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் பால் மனோஜ் பாண்டியன் கேள்வி எழுப்பினார். அந்த கேள்விக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பதில் அளித்து கூறியதாவது, தோரணமலை முருகன் கோவில் நிர்வாகத்திடம் போதிய நிதி வசதி இல்லாததால் உபயதாரர்களை எதிர்நோக்கி காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. அடுத்த 3 மாதத்திற்குள் தோரணமலை கிரிவல பாதை பணிகள் தொடங்கும்' என்றார்.

# போப் பிரான்சிஸ் மறைவுக்கு தமிழக சட்டசபையில் இரங்கல்

**சென்னை, ஏப். 23-**

போப் பிரான்சிஸ் மறைவுக்கு தமிழக சட்டசபையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

போப் பிரான்சிஸ் மறைவையொட்டி, தமிழக அரசு சார்பில் நேற்றும், இன்றும் துக்கம் அனுசரிக்கப்படும் என்றும், போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கு நடைபெறும் நாளன்றும் துக்கம் கடைபிடிக்கப்படும் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நேற்று காலை 9.30 மணிக்கு சட்டசபை கூடியதும் சபாநாயகர் அப்பாவு போப் பிரான்சிஸ் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் வாசித்தார். அப்போது, முற்போக்கு கொள்கையோடு பெரும்மாற்றங்களை முன்னெடுத்த ஆளுமை போப் பிரான்சிஸ் என்று தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, சட்டசபையில் அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர், வழக்கமான நிகழ்வுகள் கேள்வி நேரத்துடன் தொடங்கியது.

கண் தானம் செய்வீர்

# சினிமா CINI செய்திகள்

## மே தினத்தில் வெளியாகும் 'ரெட்ரோ'




சூர்யா நடிப்பில் தயாராகியுள்ள 'ரெட்ரோ' திரைப்படத்தின் இசை மற்றும் முன்னோட்ட வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள ' ரெட்ரோ' திரைப்படத்தில் சூர்யா, பூஜா ஹெக்டே, ஜோஜு ஜார்ஜ் , ஜெயராம், நாசர் , பிரகாஷ்ராஜ், சுஜித் சங்கர், சுவாசிகா, சிங்கம் புலி, கருணாகரன், நந்திதா தாஸ் , ரம்யா சுரேஷ், ஜார்ஜ் மரியான் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். ஸ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருக்கிறார்.

ஆக்சன் எண்டர்டெய்னராக தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை 2 டி என்டர்டெய்ன்மென்ட் மற்றும் ஸ்டோன் பெஞ்ச் பிலிம்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்திருக்கிறது.

வரும் மே மாதம் முதல் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் இந்த திரைப்படத்தின் இசை மற்றும் முன்னோட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதற்காக சென்னையில் உள்ள நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பிரத்யேக நிகழ்வில் ஆயிரக்கணக்கான சூர்யா ரசிகர்களுடன் படக் குழுவினர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் நடிகர் சூர்யா பேசுகையில்,.

'ரெட்ரோ' என்பது ஒரு காலத்தை குறிக்கிறது. நாம் கடந்து வந்த காலத்தை குறிப்பது. சினிமாவுக்கு வந்து 28 வருஷம் ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள். அந்த காலத்தை என்னால் மறக்க முடியாது. இந்த அழகான நினைவுகளை கொடுத்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி. இந்த படத்தில் என்னுடன் பணியாற்றிய இயக்குநர் தமிழ், கருணாகரன், கஜராஜ் அப்பா, சுவாசிகா, விது, பிரேம் ... இவர்களுடன் நான்கு மாதம் இணைந்து பணியாற்றி இருக்கிறேன். கார்த்திக் சுப்புராஜ் சிங்கிள் ஷாட்டாக எடுப்பார். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். ருக்மணி கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் பூஜா ஹெக்டேவிற்கும் நன்றி. இந்த படத்தில் அவரே டப்பிங் பேசி இருக்கிறார். இந்தப் படத்தின் தொடக்கப்புள்ளி ராஜசேகரும் , கார்த்திகேயனும் தான். அந்தமானில் ஆயிரம் பேருடன் சென்று படப்பிடிப்பு நடத்தினோம். இது மறக்க முடியாது.

கார்த்திக்கும், ஸ்ரேயாசும் இணைந்து ஒரு காட்சியை மேஜிக் போல் உருவாக்குவார்கள். இவர்களின் திட்டமிடலால்தான் நான்கு மாதத்தில் ஒரு படத்தின் படப்பிடிப்பை நிறைவு செய்ய முடிந்தது. நான் மணி சாரிடமும் பணியாற்றி இருக்கிறேன். ஹரி சாரிடமும் பணியாற்றி இருக்கிறேன். இவர்கள் இரண்டு பேரும் கலந்த கலவை தான் கார்த்திக் சுப்புராஜ். கார்த்திக் சுப்புராஜிடம் ஒரு பாசிட்டிவிட்டி எப்போதும் இருக்கும். இந்தப் படத்தில் பணியாற்றிய நடிகர், நடிகைகளுக்கும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்...

## ஜெயலட்சுமி இயக்கும் என் காதலே



ஜெயலட்சுமி தயாரித்து இயக்கும் படம் "என் காதலே ". லிங்கேஷ், இப்படத்தில் நாயகனாக நடித்துள்ளார். லண்டனைச் சேர்ந்த பிரிடிஷ் நடிகை லியா மற்றும் திவ்யா தாமஸ் இருவரும் நாயகியாகளாக நடித்துள்ளார். அறிமுக நடிகர் காட்பாடி ராஜன் வில்லனாக நடித்துள்ளார். இவர்களுடன் மதுசூதனன் ராவ், மாறன், கஞ்சா கருப்பு, சித்தா தர்ஷன், செந்தமிழ் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். டோனி ஜான் ஒளிப்பதிவு செய்துள்ள இந்த படத்துக்கு இசை - சாண்டி சாண்டெல்லோ, கதை, திரைக்கதை, வசனம் எழுதி தயாரித்து இயக்கியிருக்கிறார் - ஜெயலட்சுமி. படம் பற்றி இயக்குனர் ஜெயலட்சுமி நம்மிடையே கூறுகையில், மீனவ மக்கள் வாழ்க்கை பின்னணியில் ஒரு மென்மையான, முக்கோண காதல் கதையாக இந்தப் படத்தை உருவாக்கி இருக்கிறோம்.

உலக நாடுகள் மத்தியில் நம் தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் கலாச்சாரத்திற்கு எப்போதும் தனி மகத்துவம் உண்டு. அப்படி லண்டனிலிருந்து தமிழக கலாச்சாரத்தை ஆய்வு செய்ய, இந்தியா வரும் நாயகி லியாவிற்கு மீனவ இளைஞனான லிங்கேஷ் மீது காதல் வருகிறது.

இறுதியில் லியாவின் ஆராய்ச்சி என்ன ஆனது அவர்கள் காதல் நிறைவேறியதா? இல்லையா? என்பதை உணர்ச்சிபூர்வமாக உருவாக்கியிருக்கிறோம் என்றார். மே மாதம் திரையரங்குகளில் இப்படம் வெளியாக இருக்கிறது என்கிறார் இயக்குனர் ஜெயலட்சுமி.

## நாங்கள் - விமர்சனம்



விவகாரத்தில் தாய் தந்தை பிரிய அவர்களின் மூன்று மகன்கள் கண்டிப்பான தந்தையுடன் வளர்கிறார்கள். சிறுவயது பருவத்தை தொலைத்த , மூன்று சகோதரர்களின் வாழ்க்கை சுழலே நாங்கள் படம். மூன்று சிறுவர்களின் தந்தையாக நடித்திருக்கும் அப்துல் ரஃபே, பிள்ளைகளிடம் காட்டும் கண்டிப்பின் மூலம் வில்லனாக தெரிந்தாலும், தனது தோல்வியை கண்டு துவண்டு போகும் காட்சிகளில், சிறந்த குணச்சித்திர நடிகராக கவனம் ஈர்க்கிறார். சிறுவர்கள் மித்துன், ரித்திக் மோகன், நித்தின்.டி ஆகியோர் அருமையான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். பிரார்த்தனா ஸ்ரீகாந்த், ஷாப் ஜான் எடத்தட்டில் உள்ளிட்ட பலரும் எதார்த்த நடிப்பை கொடுத்திருக்கிறார்கள்.

இசையமைப்பாளர் வேத் சங்கர் சுகவனத்தின் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் சிறப்பாக உள்ளது. எழுதி இயக்கியிருக்கும் அவினாஷ் பிரகாஷ் ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பு பணிகளையும் கையாண்டுள்ளார். சிறுவர்களின் வாழ்க்கையை சொல்கின்ற படம் போல் கதை ஆரம்பித்தாலும், திரைக்கதை வேறு பாதையில் பயணிக்கிறது. அவ்வாறு பயணிக்காமல் ஒரே நேர் கோட்டில் பயணித்திருந்தால் படம் வென்றிருக்கும்.

## டென் அவர்ஸ்-விமர்சனம்



கள்ளக்குறிச்சி அருகே இளம்பெண் ஒருவர் காணாமல் போகிறார். விசாரணையை தொடங்கும் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிபி சத்யராஜ், அந்த பெண் கடத்தப்பட்டிருப்பதை கண்டுபிடிக்கிறார். அதே நேரத்தில் சென்னையில் இருந்து கோவை செல்லும் தனியார் பேருந்தில் பெண் ஒருவர் தாக்கப்படுவதாக அதே போலிசுக்கு தகவல் வருகிறது. விசாரனையில் புகார் அளித்த இளைஞர் அதே பேருந்தில் கொலை செய்யப்பட்டு கிடக்கிறார்.

இந்த இரண்டு வழக்குகளையும் பத்து மணி நேரத்தில் முடிக்க வேண்டும், என்ற கட்டாயத்தில் இருக்கும் சிபி குற்றவாளிகளை எப்படி கண்டு பிடிக்கிறார்? என்பதை சுவாரஸ்யமாகவும், விறுவிறுப்பாகவும் சொல்வதே 'டென் ஹவர்ஸ்'. போலீஸ் இன்ஸ்பெக்டராக நடித்திருக்கும் சிபி சத்யராஜ், காக்கி உடையில் மிடுக்காகவும், துடிப்பாகவும் நடித்திருக்கிறார். கஜராஜ், ஜீவா ரவி, ராஜ் ஐயப்பன், முருகதாஸ், திலீபன் என அனைவரும் கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

கதை முழுவதும் இரவில் நடந்தாலும், இரவு நேரக் காட்சிகளை மிக நேர்த்தியாக படமாக்கியிருக்கும் ஒளிப்பதிவாளர் ஜெய் கார்த்திக்கு பாராட்டுக்கள்

இசையமைப்பாளர் கே. எஸ்.சுந்தரமூர்த்தியின் பின்னணி இசை ஆரம்பத்திலேயே திரைக்கதையோடு பார்வையாளர்களை ஒன்றி விட செய்துவிடுகிறது. கிளைமாக்சை யூகிக்க முடியாதபடி இயக்குநர் இளையராஜா கலியப்பெருமாள் திரைக்கதையை அழகாக நகர்த்திச் சென்றிருக்கிறார். மொத்தத்தில், 'டென் ஹவர்ஸ்' சிறந்த கிரைம் திரைப்படம் எனலாம்.

## ஏப் 25ல் வெளியாகும் அன்டில் டான்



சோனி பிக்சர்ஸ் என்டர்டெயின்மென்ட் வழங்கும் அன்டில் டான், இயக்குனர் டேவிட் எஃப் இயக்கியுள்ள இப்படத்தை சாண்ட்பெர்க் மற்றும் கேரி டாபர்மேன் ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர். படம் குறித்து பேசிய இயக்குனர் டேவிட் எஃப், இரத்தம் தோய்ந்த சண்டைக்காட்சிகளாக இருந்தாலும் உணர்ச்சிப்பூர்வமான காயங்களாக இருந்தாலும் நம் பகத்தன்மைக்காக அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இந்த திரைப்படத்தின் மூலமாக நாம் பார்க்க முடியும் என்றார். அண்டில் டான் ஹாலிவுட் திரைப்படத்தைப் பொறுத்தவரை, திகில் திரைப்படமாக உணரக்கூடியதாகவும் உண்மையானதாகவும், மிருகத்தனமாகவும், இடைவிடாத ஆர்ப்பரிப்பாக உணரப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமே நடிகர் நடிகைகள் தேர்வுகள் நடைபெற்றது. எனவே இப்படம் மூலம் ரசிகர்கள் மிகுந்த ஆனந்த களிப்படைவார்கள் என்று கூறினார். ஏப்ரல் 25 அன்று ஆங்கிலம் மற்றும் இந்தியில் இப்படம் இந்தியாவில் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## சூரி நாயகனாக நடிக்கும் மண்டாடி




'மண்டாடி' படத்தின் அறிமுக விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இதில் படக்குழுவினர் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த விழாவில் 'மண்டாடி' குறித்து இயக்குநர் மதிமாறன் பேசும் போது, "சூரிக்காக உருவாக்கப்பட்ட இந்த கதாபாத்திரத்தை நினைக்கும் போது எனக்கே நெகிழ்ச்சியாக இருந்தது. இந்தக் கதாபாத்திரத்துக்கு வெறும் நடிப்பு மட்டும் போதாது. உடல் மற்றும் மன வலிமையும் தேவைப்பட்டது. அதை சூரியால் பூர்த்தி செய்ய முடியும் என்றார்.

மேலும், 'மண்டாடி' பெயருக்கான அர்த்தம் என்னவெனில், "காற்றையும், அலையையும், கடல் நீரோட்டத்தையும் நன்கு கணித்து, மீன்களின் வரத்தையும் அவற்றின் திசைவழிப் போக்கையும் பற்றிய நல்ல அறிவையும் அனுபவத்தையும் பெற்ற ஒருவர், மீன்பிடிக்கச் செல்லும்போது படகை வழிநடத்தக்கூடிய தலைமை நிலையில் இருப்பார். அவரையே ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் மண்டாடி என்று அழைக்கின்றனர் என்றார்.

எல்ரெட் குமார் தயாரிக்கவுள்ள இப்படத்தில் சூரி, சத்யராஜ், சுஹாஸ், மஹிமா நம்பியார், ரவீந்திரா விஜய், அசுத்குமார், சாச்சனா நமிதாஸ் உள்ளிட்ட பலர் நடிக்கவுள்ளனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான இலவச பேருந்து பயணச்சலுகை அட்டை

**சிவகங்கை, ஏப்.23-**

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களினால் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டணமில்லா பயண அட்டைகளை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இணைய தளம் வாயிலாக இனி வரும் நாட்களில் வழங்க வேண்டியுள்ளதால், சிவகங்கை மாவட்டத்தினை சார்ந்த மாற்றுத்திறனுடைய நபர்கள், தாங்கள் ஏற்கனவே பெற்றுள்ள பயண சலுகை அட்டையினை வருகின்ற 30.06.2025 வரை பயன்படுத்தி, கட்டணமில்லா பயணச் சலுகையினை பெற்றுக் கொள்ளலாம்.

01.04.2025 மற்றும் 02.04.2025 ஆகிய தேதிகளில் நடைபெறவிருந்த மாற்றுத்திறனாளிகளுக்கான இலவச பேருந்து பயணச்சலுகை அட்டை பெறுவதற்கான சிறப்பு முகாம் ரத்து செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு இலவச பயண சலுகை பயணத்தின் பொழுது இடையூறுகள் ஏற்பட்டால், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தினை 04575- 242025 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

## திருமங்கலத்தில் அனைவருக்கும் சுகாதாரம் சட்டமாக்க கோரி கையெழுத்து இயக்கம்

**திருமங்கலம், ஏப். 23-**

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் திருமங்கலம் கிளை சார்பாக அனைவருக்கும் சுகாதாரம் என்பதை சட்டமாக்க கோரி மாநிலம் தழுவிய கையெழுத்து இயக்கம் திருமங்கலம் அரசு மருத்துவமனை அருகில் நடத்தப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்று அனைவருக்கும் சுகாதாரம் சட்டமாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க முன்னாள் மாநில தலைவர் முனைவர் எஸ். தினகரன் கையெழுத்திட்டு இந்த கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் திருமங்கலம் கிளை தலைவர் சு.சங்கரன், செயலாளர் ஏ. எஸ். முத்துலட்சுமி மற்றும் நிகழ்ச்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜோ.முனிஸ்வரி, துறைத்தலைவர் பாண்டிச்செல்வி, வானவில் மன்ற கருத்தாளர் பவித்ரா மற்றும் துளிர் இல்ல இணை ஒருங்கிணைப்பாளர் இரா. செந்திவேல் மாவட்ட செயலாளர் மலர் செல்வி மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், துளிர் இல்ல மாவட்ட ஒருங்கிணைப்பாளர் காமேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வெம்பக்கோட்டை பகுதிகளில் வளர்ச்சி திட்டப்பணிகள்: கலெக்டர் ஜெயசீலன் ஆய்வு




**விருதுநகர், ஏப். 23-**

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து கலெக்டர் ஜெயசீலன், நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசு திட்டப்பணிகள் மற்றும் பயனாளிகளிடம் கலந்துரையாடினார். வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கங்கர்செவல் ஊராட்சி, கே.லட்சுமியாபுரம் கிராமத்தில், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ், ரூ.2.40 இலட்சம் மானியத்தில் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு வருவதையும். குண்டாயிருப்பு ஊராட்சியில், பாறைபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.51.05 இலட்சம் மதிப்பில் புதிய கணினி அறை மற்றும் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு, மாணவர்களுக்கு வழங்கப்படும்; மதிய உணவின் தரம், பயன்பெறும் மாணவர்கள் குறித்தும் ஆய்வு செய்தார்.

பின்னர், டி.கரிசல்குளம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதையும் கலெக்டர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, அரசின் மூலம் அந்தந்த ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்ட பணிகள் மற்றும் நலத்திட்டங்கள் முறையாக மக்களை சென்றடைகிறதா என பொதுமக்கள் மற்றும் பயனாளிகளிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களை கலெக்டர் ஜெயசீலன், கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்.

## திண்டுக்கலில் ஜி.டி.என் கலை கல்லூரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



**திண்டுக்கல், ஏப். 23-**

திண்டுக்கலில் உள்ள ஜி.டி.என் கலைக் கல்லூரியின் பொருளாதாரத் துறை, திருநெல்வேலி, தமிழ்நாடு, நிலையான சுற்றுச்சூழல் ஆலோசனை அறக்கட்டளையுடன் (ஈஸ்ட்) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப்பணி போன்றவற்றை மேம்படுத்துவதற்காக ஜி.டி.என் கலைக் கல்லூரி பொருளாதாரத் துறை ஈஸ்ட் அறக்கட்டளையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. திண்டுக்கலில் உள்ள ஜி.டி.என் கலைக் கல்லூரியின் பொருளாதாரத் துறை, திருநெல்வேலி, தமிழ்நாடு, நிலையான சுற்றுச்சூழல் ஆலோசனை அறக்கட்டளையுடன் (ஈஸ்ட்) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது, இது கல்வி மற்றும் ஆராய்ச்சி முயற்சிகளை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை குறிக்கிறது. பொருளாதாரத் துறையின் தலைவர் பி. ரவிச்சந்திரன் வரவேற்றார். இந்த நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் எஸ். சரவணன் தலைமை தாங்கினார். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பொருளாதாரத் துறைத் தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் ஈஸ்ட் அறக்கட்டளையின் தலைவர் பரமசிவன் ஆகியோர் முறையாக கையெழுத்திட்டனர். கல்லூரி செயலாளர் லயன் டாக்டர் கே. ரெத்தினம் மற்றும் கல்லூரி இயக்குநர் துரை ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

சர்வதேச கருத்தரங்குகள், ஆராய்ச்சி பட்டறைகள், கூட்டு ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியீட்டு நடவடிக்கைகள், விரிவாக்கத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பரிமாற்ற முயற்சிகளை ஏற்பாடு செய்வதற்கான பரஸ்பர உறுதிப்பாட்டை இந்த ஒப்பந்தம் கோடிட்டுக் காட்டுகிறது.

பொருளாதாரத் துறை உதவிப் பேராசிரியர் . பி. சதீஷ்குமார் நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். பொருளாதாரத் துறை உதவிப் பேராசிரியர் அருண் நன்றி கூறினார். இந்தக் கூட்டாண்மை, கல்விச் சூழலை மேம்படுத்துவதையும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான உலகளாவிய ஈடுபாட்டை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## திருமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா



**திருமங்கலம், ஏப். 23-**

மதுரை மாவட்டம்,திருமங்கலம் அருகேயுள்ள கப்பலூரில் செயல்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் மதுரை காமராசர் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் எஸ்.முத்தையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டதாரி மாணாக்கர்களுக்கான பட்டங்களை வழங்கி பேசினார்.

திருமங்கலம் அருகே கப்பலூரில் செயல்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மூன்றாவது பட்டமளிப்பு விழா கல்லூரியின் பிளாட்டோ அரங்கினில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.இவ்விழாவில் கல்லூரியின் முதல்வர் லட்சுமி வரவேற்புரையாற்றி பட்டமளிப்பு விழா குறித்த அறிக்கையினை வாசித்தார். இதில் ஏராளமான மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற இவ்விழாவில் மதுரை காமராசர் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் எஸ்.முத்தையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தமிழ்,ஆங்கிலம்,வணிகவியல் மற்றும் கணிதவியல் துறைகளில் 225 பட்டதாரி மாணாக்கர்களுக்கான பட்டங்களை வழங்கி வாழ்த்து தெரிவித்ததுடன் மாணாக்கர்கள் பட்டம் பெற வேண்டியதின் அவசியத்தையும்,எதிர்கால சமுதாயத்தை வடிவமைப்பதில் பட்டதாரிகள் ஆற்ற வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து பட்டமளிப்பு விழா சிறப்புரையாற்றினார்.

இதனை தொடர்ந்து பட்டங்களை பெற்றுக் கொண்ட 225 பட்டதாரிகள் அனைவரும் அவர்களுக்கான உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் க.லட்சுமி வழிகாட்டுதலின் பேரில் கல்லூரி பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் மாணவ தன்னார்வலர்கள் செய்திருந்தனர்.




● சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், திராவிட அறநெறியாளர் தமிழவேள் பி.டி.ராஜன் வாழ்வே வரலாறு நூலினை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட, உயர்நீதிமன்ற நீதிபதி சி.டி.செல்வம் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● சென்னை, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் முன்னாள் தலைவர் டாக்டர் சாந்தாவின் திருவுருவச்சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், அசன் மௌலானா எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், மருத்துவமனை தலைவர் என்.எல்.ராஜா, இயக்குநர் டாக்டர் கல்பனா மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று அமைச்சர் செந்தில்பாலாஜி 2025-2026-ம் ஆண்டிற்கான எரிசக்தித்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின்போது, கூடுதல் தலைமைச்செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன், முதன்மைச்செயலாளர் பீலா, மேலாண்மை இயக்குநர்கள் எஸ்.அனீஷ்சேகர், ஆல்பிஜான் வர்கீஸ் உடனிருந்தனர்.



● சென்னையில் நேற்று சட்டமன்ற பேரவையில், விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இடஒதுக்கீட்டின்கீழ் இந்த ஆண்டும் பணி நியமன ஆணைகள் வழங்குவது குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விளக்கம் அளித்து உரையாற்றினார்.



● சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் இரா.வைத்திநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



● மதுவிலக்கு மற்றும் மின்சாரத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தின்போது பேச அனுமதி வழங்காததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் நேற்று வெளிநடப்பு செய்தனர். தொடர்ந்து சட்டப்பேரவை வளாகத்தில் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார்.

### சென்னையில் வரும் 25-ம் தேதி

# அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

சென்னை, ஏப்.23-

சென்னையில் வரும் 25-ம் தேதி அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இதுதொடர்பாக அ.தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி தலைமையில் சென்னை ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக எம்.ஜி.ஆர். மாளிகையில் 25-4-2025 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சவுதி அரேபியாவில் பிரதமர் மோடிக்கு 21 குண்டுகள் முழங்க உற்சாக வரவேற்பு

சவுதி, ஏப். 23-

சவுதி அரேபியா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு 21 குண்டுகள் முழங்க உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் அழைப்பின் பேரில், பிரதமர் மோடி இரண்டு நாள் அரசுமுறை சுற்றுப்பயணமாக சவுதி அரேபியாவுக்கு நேற்று சென்றடைந்தார். கடந்த 40 ஆண்டுகளில் ஜெட்டா நகரத்துக்கு சென்ற முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையையும் மோடி பெற்றுள்ளார். சவுதி அரேபியாவின் போர் விமானங்கள் பிரதமர் மோடியை அழைத்துச் சென்றன. அவருக்கு 21 குண்டுகள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜெட்டா நகரத்துக்கு செல்வதற்கு முன்னதாக பிரதமர் மோடி பேசுகையில், "சவுதி அரேபியாவுடனான வரலாற்று உறவுகளை இந்தியா மதிக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளன என்றார்.

இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம், ஹஜ் யாத்திரையில் இந்திய பக்தர்களுக்கான விசா ஒதுக்கீடு குறித்து பிரதமர் மோடி கலந்தாலோசிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2016-ம் ஆண்டில் சவுதி அரேபியாவின் மிக உயர்ந்த குடிமகன் விருதைப் பெற்ற பிரதமர் மோடி, இந்தியத் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலையைப் பார்வையிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியர்களின் 2-வது வீடு என்றழைக்கப்படும் சவுதி அரேபியாவில் 27 லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த பத்தாண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி, சவுதி அரேபியாவுக்கு செல்வது இது மூன்றாவது முறையாகும். இருப்பினும், ஜெட்டா நகரத்துக்கு செல்வது இதுவே முதல் முறை. 2023 ஆம் ஆண்டு சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் அரசுமுறை பயணமாக இந்தியா வந்ததைத் தொடர்ந்து பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டுள்ளார்.

# 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு துறைகளில் வேலைவாய்ப்பு

## துணை முதல்வர் உதயநிதி தகவல்

சென்னை, ஏப். 23-

விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் இந்த ஆண்டு 100 வீரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் துணை முதல்வர் உதயநிதி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் சிந்தனை செல்வன் எம்.எல்.ஏ, விளையாட்டு வீரர்கள் மற்றும் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான பணி நியமனம் தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு துணை முதல்வர் உதயநிதி பதிலளித்து பேசியதாவது:

கடந்த ஆண்டு சட்டப்பேரவையில், மாற்றுத் திறனாளி வீரர்கள் உட்பட 100 விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் 3 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவித்திருந்தேன்.

அதன்படி கடந்த ஆண்டு அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 104 வீரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டும் 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு மற்றும் பொதுத் துறைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இடஒதுக்கீட்டில் காவல் துறையில் 11 பேர் சேர்ந்துள்ளனர். தற்போது காவல் துறையில் 32 காவல் உதவி ஆய்வாளர்கள் பணியிடங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விரைவில் இரண்டாம் நிலை காவலர் பொறுப்புக்கும் அந்த விண்ணப்பங்கள் கோரப்படும்.

இதுவரை 198 பாரா விளையாட்டு வீரர்களுக்கு மட்டும் ரூ.4.50 கோடி செலவு செய்திருக்கிறோம். அவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று வெற்றி பெற்ற பின்பு, மற்ற வீரர்களுக்கு இணையாக மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை, இதுவரை 196 பாரா வீரர்களுக்கு ரூ.27 கோடி வழங்கியுள்ளது.

இந்த 3 சதவீத இடஒதுக்கீட்டின்கீழ் 5 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 100 விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட உள்ள நிலையில், அதில் குறைந்தபட்சம் 25 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

ரோமானிய தியாகிகளின் சதுக்கம் வழியாக செல்லும். பின்னர் ஊர்வலம் மணி வளைவு வழியாக செயிண்ட் பீட்டர் சதுக்கத்திற்குள் சென்று வாடிகன் பேராலயத்தின் மைய வாசல் வழியாக நுழையும். வாக்குமூல பலிபீடத்தில், கார்டினல் கமர்லெங்கோ இறுதிச் சடங்கு வழிபாட்டுக்கு தலைமை தாங்குவார். அதன் முடிவில் ரோமானிய போப்பாண்டவரின் உடலுக்கு இறுதிச் சடங்குகள் நடைபெறும்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜார்ஜ் பெர்கோகிலோ என்ற இயற்பெயர் கொண்ட போப் பிரான்சிஸ், லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த முதல் போப் என்ற பெருமையை பெற்றவர். 2013-ம் ஆண்டும் மார்ச் 13-ம் தேதி 266-வது போப்பாக தேர்வு செய்யப்பட்ட அவர், கத்தோலிக்க கிறிஸ்தவ மத நடைமுறைகளில் அதிக சீர்திருத்தங்களை மேற்கொண்டவராக அறியப்படுகிறார்.

இந்த நிலையில், ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ். இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

# காஷ்மீரில் சுற்றுலா பயணிகள் மீது துப்பாக்கிச்சூடு: ஒருவர் பலி

ஸ்ரீநகர், ஏப். 23-

ஜம்மு - காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஒருவர் பலியாகியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஹால்காம் பகுதியில் குதிரைகள் அல்லது நடந்து மட்டுமே செல்லக்கூடிய பைசரன் எனும் புகழ்பெற்ற சுற்றுலாத் தளத்தில் நேற்று (ஏப்.22) வழக்கம்போல் சுற்றுலாப் பயணிகள் வருகை இருந்தது.

அப்போது, அங்கு வந்த அடையாளம் தெரியாத முகமூடி அணிந்த தீவிரவாதிகள் கூடியிருந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 12 சுற்றுலாப் பயணிகளின் உடலில் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்து படுகாயமடைந்த நிலையில் அதிகாரிகள் அவர்கள் அனைவரையும் ஹெலிகாப்டர் மூலமாக மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில், படுகாயமடைந்தவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி பலியாகியுள்ளார். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. மேலும், அந்தப் பகுதி முழுவதும் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, வரும் ஜூலை 3-ம் தேதி முதல் அமர்நாத் யாத்திரை துவங்கப்படவுள்ளது. அந்த யாத்திரைக்கு பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் மிகவும் நீண்ட பாதையான சுமார் 14 கி.மீ. நீளமுள்ள பயணமானது அனந்தநாக் மாவட்டத்தின் வழியாகவே மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.